பொன்னி





பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

க

பொருளடக்கம்

மலர் 3 NA-3 இதழ் 13

அம்மான்

விசு. திருநாவுக்கரசு

தில்லை வில்லாளன்

வழிப்போக்கன்

நா. பாண்டுரங்கன்

சுகி

சி. திருநாவுக்கரசு

நா. முத்து

டர்பன் சங்கரகுமாரன்

கே. ஏ. மதியழகன்

தமிழரசன்

நா. வேத்தரசன்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 விலை அணா 5
ஆடித் திங்கள் 26-ம் நாள் 10—8—49

சீன நாட்டில் சேர்ந்த வெற்றி

வெற்றி வெற்றி வெற்றி வெற்றி
செங் கொடிக்கு வெற்றியே!

சொந்த நாட்டில் மக்கள் ஆட்சி
துலங்கச் செய்த ரஷியா
எந்த நாட்டின் செல்வரு மஞ்ச
ஏற்றங் கொண்டு வாழுவதே! வெற்றி... ..

செங் கொடிக்குச் சீன நாட்டில்
சேர்ந்த வெற்றி கண்டதால்
எங்கு முள்ள செல்வர் அஞ்சி
ஏங்கு கின்றார் பாவமே வெற்றி......

செங் கொடிக்கு வெற்றி சேர்வ
தேழை மக்கள் வெல்வதாம்
செங்கொடிதான் ஏற்றத் தாழ்வைத்
தீர்த்து வைக்கும் கருவியாம்! வெற்றி......

ஏழை மக்கள் வெற்றி கண்டால்
இன்பந் தோன்றும் பாரிலே
ஏழை என்ற சொல் மறையும்
செல்வர் ஆட்சி மாயுமே! வெற்றி......

—அம்மான்



இந்தி ஏகாதிபத்தியம்

இந்திமொழியின் ஆதிக்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது; இந்தியாவின் தேசிய மொழி என்றும், நாட்டின் பொது மொழி என்றும், இந்திய அரசினர் மொழி என்றும் இந்திக்கு உரிமை தேடப்படுகிறது. ஆங்காங்கே கிளைத்துள்ள 'ஹிந்தி பிரசாரசபை'கள் இம்மொழியைப் பரப்புவதில் இடைவிடாத முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. தேர்வுகள் வைப்பதும், பட்டமளிப்புவிழா நடத்துவதும், கல்லூரிகள் நிறுவுவதும் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணமிருக்கின்றன. மாகாண அரசினரின் ஆதரவும குறிப்பாகச் சென்னை ஆட்சியின் ஒத்துழைப்பும் இந்திமொழிக்குக் கிட்டியிருக்கின்றன. கட்டாயமாகப் பள்ளி செல்லும் ஒவ்வொரு இளம் பிள்ளையும் இந்தியைப் படித்துத் தீரவேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலையில், நாடோறும் வரும் செய்திகளும் ''இந்தி''யின் ஆதிக்கம் வளர்கிறது என்பதையே நமக்குக் காட்டுகின்றன. அரசியலமைப்புமன்ற உறுப்பினர் நூற்றுவர் இந்தி நாட்டின் தேசிய மொழியாக வேண்டுமென்று திருத்தம் கொண்டுவரப் போவதாக முன்னறிவிப்புச் செய்துள்ளனர்; தேவ நாகரி வரிவடிவிலேயே தந்திச் செய்திகள் அனுப்ப அரசாங்கம் அனுமதித்திருக்கிறது; இப்போது பத்திரிகைச் செய்திகளும் இந்திமொழித் தந்தி மூலம் அனுப்பப்படலா மென்றொரு அறிக்கை கூறுகிறது. ரயில் நிலையங்களில் இந்தியிலும் பெயர் எழுதப்பட வேண்டுமென்ற உத்தரவு நடைமுறைக்கு வந்துகொண்டிருக்கிறது. முதலில் இந்தியிலும், அடுத்து ஆங்கிலத்திலும், கடைசியில் தாய்மொழியிலும நிலையப் பெயர்கள் எழுதப்பட்டிருக்கும் கொடுமையை நம் கண்ணாற் காண நேர்ந்திருக்கிறது. யாரோ ஒரு அம்மையார் இந்தியைத் தேசிய மொழியாக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து டில்லியில் 'பட்டினி' நாடகம் நடத்தப்போகிறார்களாம். இவ்வாறு இந்தி ஆதிக்கம் வேர்கொள்ளும் காட்சியைச் செய்தி மேற் செய்திகள் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

"இந்திக்கு ஆதிக்கம் தரக்கூடாது; அது தவறு; நீதியுமல்ல" என்ற கோரிக்கைக்கு ஆதரவு இல்லையென்று யாரும் எண்ணிவிடவும் முடியாது. ஒவ்வொரு மாகாணத்திலும் இம் மொழிப் பூசல் இருந்து கொண்டுதானிருக்கிறது. பஞ்சாப்பில் சீக்கியர்கள் இந்தி திணிப்பதை எதிர்க்கிறார்கள்; வங்காளம் இந்தியை வரவேற்கத் தயாரிலில்லை; பீஹாரிலும் இந்திக்கு எதிர்ப்புண்டு; தென்னாடு இந்தியின் வாடையே கூடாதென்று போர் முரசார்க்கிறது. இத்தகைய எதிர்ப்பு முன்னணி இருந்தும் இந்தி மொழி 'ஆதரவு' பெற்று 'அரியணை' ஏற முயற்சிப்பது நமக்கு விந்தையாய்த்தானிருக்கும்.

ஆனால் நாட்டின் ஆட்சியைத் தம்வசத்தே கொண்டுள்ளவர்கள் "இந்தி"க்குச் சார்பு காட்டுகிறவர்கள். ஒரு திட்டமாக 'இந்தி பொதுமொழி' என்று தீர்மானம் உருவாகுமுன்பே இந்தி ஆதிக்கம் செலுத்த அவர்கள் அனுமதிப்பதில் வியப்பொன்றுமில்லை. அரசியலமைப்பு மன்றம் இந்தியைப் பொதுமொழி என்று ஒப்புக்கொள்ளவில்லை. அப்படி இருக்க, டில்லி அரசினர் ரயில் நிலையங்களில் இந்தி மொழியில் பெயரெழுத உத்தரவிடுவதும், சென்னைசர்க்கார் பாடத்திட்டத்தில் இந்தியைச் சேர்ப்பதும் எவ்வாறு நேர்மையாகும்? நாட்டில் இந்திக்கு எதிர்ப்பிருக்கிறதென்பதைக் காங்கிரஸ் காரியக்கமிட்டியே நன்கு உணர்ந்திருக்கிறது; அதனால்தான் உருவான முடிவிற்கு வர முடியாமல் திணறுகிறது. இந்நிலையில் காங்கிரஸ் ஆட்சிலுள்ள அமைச்சர்கள் இந்திக்கு 'வக்காலத்து' வாங்கிப் பேசுவது எத்தனை பொருத்தமற்ற செயலாகும்! அதிலும் நம் சென்னை அமைச்சர்கள் இந்திக்காகப் பேசுவது விந்தையிலும் விந்தைதான்! தமிழே முற்றும் படித்தார் நூற்றுக்குப் பத்துள்ள நிலையில், "ஆங்கிலம் மட்டும் போதாது, இந்தியையும் சேர்த்துப் படி தம்பி" என்று கட்டளையிடும் விநோதத்தை நாம் வேறு எங்கு காண முடியும்! இக் கட்டளையில் நாம் "ஒரு முன்னேற்றக் கருத்து" பொதிந்துள்ளதென்றோ, சிறந்த குறிக்கோள் உள்ளடங்கியிருக்கிறதென்றோ எப்படிக் கூற முடியும்? 'கதர்' மேலுள்ள அபார ஆசையில் தோழர் பிரகாசம்காரு, மில்களை ஒழிக்க விரும்பினாரே, அத்தகைய பொருளற்ற போக்கைத்தான் நம் கல்வித் திட்டத்திலும் காண முடிகிறது! இல்லையேல் டில்லி தீர்மானிக்கு முன்பே 'இந்தி'யைக் கட்டாயமாக்குவதன் நோக்கம்தான் என்ன? எத்தனையோ மாகாணங்கள் 'இந்தி'யைப் பற்றிக் கவலையற்றிருக்கும்போது சென்னை மட்டும் முந்திக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன வந்தது? முழு எதிர்ப்பு இருக்கிறது, இந்தி மொழிக்கு என்று தெரிந்தும், காங்கிரஸ்காரர்களே இந்தியை வரவேற்கவில்லை என்பதைக் கண்டும், ஆட்சியினர் ஒருமுறை முயன்று கைவிட்ட திட்டமாயிற்றே என்றும் ஆலோசியாமல் இந்தியை விடாப்பிடியாய்ப் பள்ளிகளில் கட்டாயமாக்குவதன் கருத்து வேறு என்னவாய் இருக்க முடியும்? பள்ளிகளில் பணம் செலவழிவதுதான் மிச்சமேயொழிய உருப்படியான பயனில்லையென்று ஓராண்டு

அனுபவம் தெள்ளத் தெளியக் காட்டியும், அந்த ஏற்பாட்டை ஏன நீடிக்க முடிவு செய்ய வேண்டும்?

"உத்தியோகத்துக்கு இந்திப் பயிற்சி அவசியம்" என்று விதிகளைத் திருத்தப் போகிறோம் என்று அமைச்சர்கள் செல்லுமிடமெல்லாம் பேசிவிட்டு, அதே மூச்சில் "இந்தியால் எப்படித் தமிழ் கெடும்?" என்றும் கேட்டுவிட்டு வருகிறார்கள். ஆங்கிலம் உத்தியோக மொழியாய் வந்ததால் தமிழ் எப்படிப் பாழ்பட்டது. தமிழ்ப் பயிற்சி எவ்வளவு பிற்போக்கிலிருக்கிறது என்று உணர்ந்தவர்கள் 'இந்தியால் தமிழ் கெடாது' என்ற சப்பைக்கட்டு வாதத்தை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? தமிழ் முதல் மொழியாயிற்றே யொழிய. தமிழுக்கு அந்த ஏற்பாட்டினால் என்ன தகுதி ஏற்பட்டிருக்கிறது? அரசாங்கப் பணியாற்று வோர்க்குத் தமிழ்ப் பயிற்சி கட்டாயமாயிற்றா? அல்லது கால வரையறையிட்டுத் தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டளையாவது பிறந்ததா? பள்ளிகளில்தான தமிழின் நிலை என்ன உயர்ந்திருக்கிறது? ஆங்கிலத்தின் பிடி இன்னும் தளர வில்லையே! அந்த இடத்திற்குத் தானே இந்தி ஆயத்தமாகிறது!

இந்நிலையில் ஜில்லா போர்டு தேர்தல் பிரசாரம் செய்யும் தோழர் காமராஜர் இந்தி எதிர்ப்பாளர்களை முழுமூச்சாகத் தாக்கும் எண்ணத்தில் 'தாய்மொழியிடத்து அன்பு வேண்டியதுதான்; ஆனால் எல்லை மீறக்கூடாது' என்று ஞானோபதேசம் செய்யக் கேட்கிறோம். 'இப்போது இந்தியைப் படிக்காமல் இருந்துவிட்டுப் பின்னர் ஏமாற வேண்டாம்' என்று அமைச்சர் மாதவமேனன் அறிவுரை பகராத கூட்டமுண்டா? இப்படியாக இந்தி 'திக்விஜயம்' செய்யும்போது ஒரு அரிய உண்மையைக் கட்சிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் வெளியிட்டிருக்கிறார்.

அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் இந்தி இடத்துக்கு இடம் வேறுபட்டு வழங்குகிற தென்றும், பயிலும் இந்திக்கும் பேசப்படும் இந்திக்கும் வேறுபாடு மிகுந்திருக்கிறதென்றும், சென்னை ஹிந்தி பிரசார சபையில் பட்டம் பெற்றவர் அந்த இந்திப் பயிற்சியைக் கொண்டு வடநாட்டில் காலம் தள்ள முடியாதென்றும், கிழக்கு பஞ்சாப், பம்பாய், மேற்கு வங்கம் மூன்று இடத்திலும் இந்தி பயின்றவர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கும்போது, அவர்கள் பேசும் இந்தி ஒருவர்க்கொருவர் புரிந்துகொள்ள முடிவதில்லை யென்றும், இப்படிப்பட்ட மொழியைப் பயில்வதால் ஒரு மாகாணத்தவர் மற்றொரு மாகாணத்தவரோடு எப்படிக் கலந்து பேச முடியுமென்றும் விளக்கமாகக் கூறியிருக்கிறார். எனவே இந்தியைப் பொதுமொழியாக்குவது இயலாது என்றும் அவர் முடிவு கட்டுகிறார். இந்திக்கு வக்காலத்து வாங்குபவர்கள் இவர் கூற்றிலுள்ள உண்மையைக் காண வேண்டுகிறோம். இந்தியாவில் பெரும்பாலோர் பேசும் மொழி என்றும், வடநாட்டோடு வர்த்தகத் தொடர்பு ஏற்படுத்திக்

கொள்ள அரிய வாய்ப்பளிக்கும் மொழி என்றும், இந்தியைப் படித்துக்கொண்டால் இந்தியாவில் எந்த இடத்திற்கும் போக லாமென்றும் நம்மியவர்கள் காசிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் வெளியிடும் உண்மைகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். இந்திக்காகப் பரிந்து பேசும் காங்கிரஸ் தலைவர்களும் அமைச் சர்களும் இந்நிலையை எண்ணிப் பார்க்கவேண்டும். எந்நோக் கத்தில் இந்தி பரப்பப்படுகிறதோ, அந்நோக்கம் ஈடேறப் போவ தில்லை என்பதை இந்த அறிக்கை நன்கு தெளிவாக்குகிறது; அனுபவபூர்வமாக விளக்குகிறது. இதனைக் கண்ட பின்னும் தமிழகத்தில் 'இந்தி மோகம்' நிலவுமானால் அது ஆச்சரியமான செய்தியேயாகும்.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், அதனைப் பொது மொழியாக்குவதில் ஆர்வம் காட்டுவது இயற்கை. 'பேராசை'தான் என்றாலும் அவர்கள் விரும்புவதிலும், தீர்மா னம் கொண்டுவருவதிலும், உண்ணாவிரதம் இருப்பதிலும் பொருளுண்டு. அவர்கள் போடும் பெருங் கூச்சலில் மயங்கி, இந்தி பற்றி ஒன்றும் அறியாது, 'இந்தி பொது மொழிதான்' என்று மற்றவர்கள் 'ஆமாம்' போடுவது சிரிப்பூட்டத்தக்க செய லாகும். எனவே 'இந்தி ஏகாதிபத்தியம்' உருக்கொள்ளத் தமிழ கத்தில் யாரும் துணை போகவேண்டாமென்று மன்றாடிக் கேட் டுக் கொள்ளுகிறோம். 'தலைக்கு மேல் ஆபத்து' இருக்கிறது; அதனை வலிய நாமே வரவழைத்துக் கொள்ளவேண்டாம் என்று எச்சரிக்கிறோம். இந்தியை முக்காடிட்டு வடக்கு நோக்கி அனுப்பத் தமிழகம் முழுமூச்சோடு முனையும் காட்சியை நாம் மீண்டும் காணத்தான் போகிறோம். அந்நாளை மிக ஆவலு லுடன் எதிர்பார்த்திருக்கிறோம்.



கழகம் நமது!

புதுத் தலைமை காண்போம்!

திராவிடர் கழகம் செயலற்றுவிட்டது; தொண்டு; ஆக்கவேலை; உருவான வேலை ஏதும் எங்கும் கடந்த ஒரு மாத காலமாக நிகழவே இல்லை! தலைவரின் திருமணம் என்ற பேரிடி கழகப் பணிக்கே முற்றுப்புள்ளி வைத்துவிட்டது; தோழர்கள் குழப்பிய மனத்தினராய், குனிந்த வடிவினராய் உலவ வேண்டிய நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது!

இந்நிலை மாற வேண்டும். அனைவருடை ஆவலும் இதுதான்! வழிவகையில்தான் கருத்து வேறுபாடு எழும், ஆனால் செயலற்ற நிலை தீரவேண்டுமென்பதில் யாரும் வேறுபட முடியாது.

'பொருந்தாத் திருமணம் கழகக் கட்டுப்பாட்டைக் குலைக்கும்; கொள்கைக்கே உலைவைக்கும்; கட்சி ஒழுங்கையே தகர்க்கும்' என்று எடுத்துக்காட்டிக் 'கொள்கையை மீறித் திருமணம் புரிந்துகொண்டவரின் தலைமையிலே இனித் தொண்டாற்ற முடியாது; புதுத் தலைமை வேண்டும்' என்று உறுதி கூறியவர்கள், ஆயிரமாயிரம் உயிர்த் தொண்டர்கள், கழகமே தங்கள் வாழ்வும் தாழ்வும என்று கருதியுள்ளவர்கள் இந்நிலையில் என்ன நடைபெற வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்? நடந்ததை மறந்துவிட்டுக் கழக மாநாடு கூடுவதை அவர்கள் விரும்பவில்லை. தலைவர் தவறிழைத்தார்; தவறு என்று சுட்டிக் காட்டியவர்களைச் சதிகாரர்கள் என்றழைத்தார்; மேலும் என்னென்ன கூறவேண்டுமோ, தம் குற்றம் மறைய, அத்தனையும் கூறி மெருகிட்டார். ஆனால் தொண்டர்கள் எதிர்பார்த்தது, தலைவரின் இவ் விளக்கமல்ல. அல்லது 'திருமணம் பொருத்தமானதுதான்' என்று காட்டும் செப்பிடுவித்தை ஆதாரவுமல்ல. பிழையிழைத்த, இயக்கத்துக்கே மாறாத பழி சேர்த்த தலைவர், தாமாக, இயக்க ஊழியர்களின் ஒருமுகமான கருத்தை உணர்ந்து, விலகிக்கொள்வார் என்றுதான் தொண்டர்கள் எண்ணினர். கண்ணியமாய், அவசரத் திட்டங்களை மேற்கொள்ளாமல், தலைவருக்கு வாய்ப்பு அளித்தனர். ஆனால் பெரியாரின் போக்கு தொண்டர்களின் நேர்மையை மதிப்பதாயில்லை; அதற்கு மாறுபாடாகச் சட்டப் புத்தகத்தின் துணைகொண்டு, கட்டுப்பாடென்றும் ஒழுங்கென்றும், சர்வாதிகார போதனையில்

முனேந்திருக்கிருர்; பகுத்தறிவிற்குச் சிறிது இடந்தர எண்ணுபவர்கட்கு எனது இயக்கத்தில் இடமில்லை என்று புதுமுகம் காட்டுகிருர். எனவே அவர் பெருந் தன்மையாக நடந்துகொள்வாரென்று எதிர்பார்ப்பது முடியாத தொன்ருகிவிட்டது.

நிர்வாகக் குழுத்தலைவர் தோழர் வேதாசலனுரும் தம் கடமையை மறந்து, பிறர் நினைப்பூட்டியும், அறியாதார் போலக் கழக மாநாடு கூட்டுவதில் கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டார். இக் குற்றத்தைச் சுட்டிக் காட்டித் துணைத் தலைவர் திரு. கே. கே. நீலமேகம் வேதாசல னுருக்கு எழுதியுள்ளகடிதம் கண்டு மகிழ்ச்சியடைகின்ரேும். கடமையைப் பெரிதாய்க் கொண்டு பணியாற்ற முன்வந்துள்ள தோழர் நீலமேகம் அவர்களைப் பாராட்டுகிரேும். அவர் தம் முயற்சியால் கூடும் நிர்வாகக் கமிட்டி பெரியாரின் தலைமையை மாற்றுவதுடன், கழகம் பணியாற்றப் புதுத் திட்டங்களையும் வகுக்குமென்றும் நம்புகிரேும்.

செயலற்ற நிலை— அத்துடன் மாற்றுக் கட்சித் தோழர்களின் எளனம்—இத்தகைய ‘சிறைக்காவல்’ நிலையினின்றும் கழகத் தோழர்கள் உடனடியாக விடுதலை பெற்ருகவேண்டும். தலைமை மாற்றம் நிகழ்வதும் கழகப் பணியாற்றப் புகுவதும் ஒன்றையடுத்து ஒன்று விரைவில் நிகழ்ந்தாக வேண்டும். இனியும் இதில் தாமதம் கூடவே கூடாது!

பெரியார் தமதுதான் திராவிடர்கழகம் என்று சொல்லுவார்; சட்டப் புத்தகம், விதி, நடைமுறைகளை விரித்துக் காட்டுவார்; ‘சன் தியேட்டரில்’ கூடிய நீதிக் கட்சியினரும் அப்படித்தான் கூறினர்; நமக்கு நினைவிருக்கிறது. கழகம் நம்முடையதுதான்! இதில் யாருக்கும் ஐயம் வேண்டியதில்லை. ‘பொதுமக்கள் ஆதரவு’ என்ற வெள்ளத்தின் முன்பு சட்டப் புத்தகம் என்ன செய்ய முடியுமென்பதை நாம் அறிவோம்! தோழர்களே! தாமதம் வேண்டாம்! விரைந்து செயலாற்றுங்கள்! வெற்றி நமதே!

கொள்கை பெரிது!

[பொருந்தா மணம் புரிந்துகொண்ட தலைவரின் கீழ் இனிப் பணியாற்ற முடியாது என்று உறுதி தெரிவித்து நமக்கு எண்ணற்ற கடிதங்கள் வந்துள்ளன; சிலவற்றை மட்டும் இங்கே வெளியிட்டுள்ளோம் - ஆசிரியர்]

கண்ணன் காட்டிய வழி

பெரியாரின் திருமணம் தமிழ் நாட்டில் பெரிய பரபரப்பை உண்டாக்கி விட்டது. தரும புரம் பண்டார சந்நிதிகளின் வழக்கைக் காட்டிலும் அதிக ஆவலோடு பெரியார் திருமண முடிவை அறிய ஆசைப்பட்ட வர்களில் நானும் ஒருவன். ஆரம்பத்தில் வந்த செய்தி யைப் பொய் வதந்தி என்று நினைத்தேன். ஆனால் மீண்டும் மீண்டும் வந்த செய்திகள் என் நினைப்பைத் தவறாக்கின. எத் தனையோ அறிஞர்கள் தடுத் தும் பெரியாரின் முதலைப்பிடி, வளர்ந்து வரும் திராவிடர் கழ கத்தின் பெருமையைச் சீர் குலைத்து விட்டது. பெரியார் மணியம்மையைக் கட்டிக் கொண்டதோடல்ல — பிறர் முன்னிலையில் தன்மான இயக் கத் தோழர்களைக் கேலிக் கூத் துக்கு ஆளாக்கிய பெருமை யையும் கட்டிக் கொண்டார் என்றே எண்ணுகிறேன். திரு மணத்திற்குப் பெரியாரின் விளக்கம் அவ்வளவு பொருத்த மானதாய்த் தெரியவில்லை. வார்சு வேண்டுமென்ற நோக் கம் மணியம்மையைத் திரு மணம் செய்யச் சொல்லிற்று என்று கூறுகிறார்.

வார்சுதான் வேண்டுமென் றால் மனைவி யென்று தான் வைத்துக் கொள்ளவேண் டுமா? மகளென்று வைத்துக் கொண்டால் செல்லாதா? செல்லாவிட்டால் சொத்தை எழுதிவைத்துவிட முடியாதா? அது மட்டுமல்ல! அப்பனுக் குப் பின் பிள்ளை ஆள வேண்டு மென்ற நியதியைப்போல் பெரி யாருக்குப்பின் இயக்கத்திற்குத் தலைமைதாங்க மணியம்மையை நியமிப்பது அறிஞர் அண்ணாத் துரை சொல்வதைப் போல் நமக்குக் காட்டு ராஜாங்கத் தைத்தான் நினைப்பூட்டுகிறது. பெரியார் திருமணம் செய்யும் யோசனையைக் கலந்தாலோ சிக்க ஆளில்லாமல், ஆச்சாரி யாரை யோசனை கேட்டதும் "நீங்கள் என்னைக் காட்டிலும் அனுபவசாலி நீங்கள். சரி யென்று எண்ணியதைத் தயங் காமல் செய்யுங்கள்" என்று ஆச்சாரியார் தட்டிக் கொடுத் ததும் அம்பலமாவதைப் பார்த்தால் திராவிடர் கழகத் தார் தலை குனிவதைத் தவிர வேறு வழியில்லை! இந்தத் திரு மணத்தினால் பெரியார்,

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

என்ற குறளுக்கு இலக்கிய மாகி "நான் சொல்கிறபடி செய். ஆனால் நான் செய்கிறபடி செய்யாதே" என்ற பகவத் கீதை வழியில் போய் விட்டார்

என்றே நான் கருதுகிறேன். பொதுவாக நடந்த திருமணம், என்று பிளவுபடும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கட்கு இணையற்ற மகிழ்ச்சியையும் எதிர்வார்த்தை பேசாமல்; இயக்கத்தின் தந்தையென்று பெருமைப்பட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு இடி விழுந்து இற்ற நெஞ்சத்தையும் வளர்ந்து வந்த இயக்கத்தைச் சிதறவைத்த சிறுமையையும் உண்டாக்கி விட்டது என்பதை, இயக்கத் தலைவர் எதைச் சொன்னாலும் கேட்க வேண்டும் என்ற கொள்கையுடையவர்கள் கூட, மறுக்க முடியாது.

இராம. வே. சேதுராமன்

காக்க வேண்டும்

அறுவடை செய்யப்போகும் நேரத்தில் வயலுக்கு ஒருவன் தீ வைத்துவிட்டான். தீ வைத்தவனைப்பற்றிக் கவலைப்படுவதை விட, தீ பரவாமல் தடுப்பது தான் முறை. அதுபோல பெரியார் திருமணத்தை முடித்துக்கொண்டார். இனி அந்தத் திருமணம் என்ற ஏற்பாட்டால் கட்சிக்குத் தீமை எதுவும் நேரிடாதபடி கட்சியைக் காக்க வேண்டும். அதாவது, கரும்புக் காட்டுக்குள்ளே யானையை இனியும் மேயவிடக் கூடாது என்று தான் கூற விரும்புகிறேன்.

சி. மாணிக்கம் (தமிழரசன்)

புதுத் தலைவர் வேண்டும்

குதிரை கீழே தள்ளியது மல்லாமல் குழியும் பறித்த கதை போல, பொருந்தா மணம் செய்து நமை வேதனைக்குள்ளாக்கிய பெரியார், தவறு என்று எடுத்துக்காட்டுபவர்கள் மீது சதிக் குற்றமும் சாட்டுகிறார்! இன்னும் அவரைத் தாங்கிப்பிடிக்க "விடுதலை"யில் இரண்டொரு தோழர்கள் பொருந்திய மணம் என்று விளக்கம் கூற முற்படுவது வெட்கக்கேடேயாகும். இன்னும் அந்த "அம்மை"யின் விடுதலைக்கு ஆதரவு காட்ட நன்கொடை அனுப்புவதும் "ஐயா" தலைமையைச் சகித்திருப்பதுவும், யானை தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக்கொள்வது போலாகும். பெரியாரால் பெரிய மனிதர்கள் ஆக்கப்பட்டவர்கள் நன்றியை மறந்து அவரைக் கவிழ்த்துப் பதவி பெறச் சூழ்ச்சி செய்கிறார்களாம்! பெரியார் யாரால் பெரியாராக்கப் பட்டாரோ அந்த மக்களாலேயே அவர் திருமணச் சேதி கேட்டதிலிருந்து சிறியாராக மதிக்கப்பட்டுவிட்டார் என்பதை உணர்வார்களாக! இனி ஒரு கணமும் அவர் தலைமையை நீடிக்க விடாது புதுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் மத்திய நிர்வாக உறுப்பினர்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

அ. ச. பாலு
தலைவர்
திராவிட வாலிபர் கழகம், பொள்ளாச்சி

ஐந்து இலட்சம் பெரிதா?

திராவிடங்கண்ட புத்தருக்குப் பிறகு, உலகப் பொது மறைக் குறளைத் தந்த வள்ளுவருக்குப் பிறகு, இஸ்லாம் கண்ட முகம்மது நபிக்குப் பிறகு — கொள்கைக்காகச் சிலுவையில்

அறையப்பெற்ற இயேசுவிற்குப் பிறகு, கிரீஸ் நாட்டுத் தத்துவ ஞானி சாக்கரட்டீஸுக்குப் பிறகு, சீன கண்ட சீர்திருத்த சிற்பி சன்யாட்சென்னுக்குப் பிறகு, ரஷ்யா கண்ட சமத்துவ ஞானி லெனினுக்குப் பிறகு, காரல்மார்க்ஸுக்குப் பிறகு, ஆரிய சூழ்ச்சிக்கு இரையான அகிம்சையின் அண்ணல் காந்தியடிகளுக்குப் பிறகு திராவிடங்கண்ட சீர்திருத்தச் செம்மல், குறள் போற்றும் குணக்குன்று என்று நம்மால் ஏற்றிப் போற்றப்பட்டு வந்த பெரியார் தன் தள்ளாத 72 வது வயதில் 9-7-49 ல் பொருந்தாத் திருமணம் செய்து கொள்கைக்கும, இயக்க வளர்ச்சிக்கும் ஐந்து இலட்சம் வெண்பொற் காசுகளுக்கு ஆசைப்பட்டு முற்றுப் புள்ளி வைத்துவிட்டார்—திராவிடம் பிரிந்திருந்தால் பெரியாரின் கண்களுககு ஐந்து பெரிதெனத தோன்றி இருககாதே! ஏன திராவிடமே அவரின் சொத்துத் தானே — உலகத்தைத் திருத்திய உத்தமர்கள் காசுக்கும் — சுகபோக வாழ்விற்கும், வாரிசுககும் ஆசைபபட்டிருந்தால், எந்தப் புனித நிலையைக் கண்டிருக்க முடியும? இன்றைய நிலையிலே நம இயக்கம வளர்ச்சியடைய எத்தனை குடும்பங்கள் இன்னலுக்கும், ஏசலுக்கும் இரையாகி இருக்கின்றன. எடுத்துக்காட்ட ஏடு இடங்கொள்ளாதே! அவர்களெல்லாம் தன் வாழ்வுக்கும் பின் சந்ததி வாழ்வுக்கும் பாடுபட எண்ணி இருந்தால் இயக்கம் இவ்வளவு வளர்ந்திருக்க முடியுமா? இதைப் பெரியார் சிறிதளவுகூட எண்ணாது, மணியம்மையை வாரிசாகக் கொண்டு கழக வளர்ச்சியிலே கரி பூசி விட்டார். கண்ணீர் விடுகிறோம் துடைப்பாரில்லை, உடைந்த உள்ளத்திற்கு ஊன்றுகோலாக ஒரு நிலையும் பிறக்கவில்லை, ஐந்து லட்சமும், ஐயா பெரியாரும், அம்மை மணிக்குச் சேரட்டும். கவலை இலலை, நாம் நினைத்தால் ஐந்து அல்ல' ஐம்பது லட்சத்தைக் காணலாம். கலங்காது அறிஞர் அண்ணாவில் ஆறுதல் மொழிக்கும், நிர்வாகக கமிட்டியினா முடிவுக்கும் ஆதரவு அளிக்குமாறு திராவிடத்திற்குக் கூற ஆசைப்படுகிறோம்.

S. நெடுமாறன்
M S மணி
திருச்சி மாவட்ட திராவிடர் கழக நிர்வாக உறுப்பினர்கள்



பள்ளிக்கூடத்தில் பையன்களைச் சேர்க்க வந்தவர்:- இந்த இரண்டு பையன்களையும் பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டும்.

தலைமை ஆசிரியர்:- இந்தப் பையனை மட்டும் வேண்மோனல் சேர்த்துக் கொள்கிறோம்; அவனுக்கு இடமில்லை.

சிலப்பதிகாரக் காட்சிகள்

விசு. திருநாவுக்கரசு

13. ஆயமகளிர் ஆடிய குரவை

மதுரை நகரிலே, மன்னவன் மாளிகையிலே நாளும் முழங்கும் காலை முரசம் வழக்கம் போல் இன்றும் முழங்குகிறது. இம் முழக்கம் அருகிலுள்ள ஆயர்பாடியிலும் கேட்கிறது. கேட்ட ஐயைக்கு அரண்மனைக்குத்தான நெய்யளக்கும் முறை நினைவுக்குவரத் தனமகளை அழைத்தாள். தயிர் கடையத் தக்க மத்தையும கயிற்றையும் கையொடு எடுத்து வந்தாள். தயிர்த் தாழியைப்பார்த்தாள். என்ன ஆச்சரியம்! உறையிட்ட தாழிகளிலே பால் தோயவில்லை!

கையிலே கொண்ட மத்தும் கயிறுமாய் மெல்லநகர்ந்து தொழுவம் நோக்கிவந்தாள் காளைகள் கண்ணீர் உகுத்து நிற்கக் கண்டாள். காரணமே புரியவில்லை. தான் செய்ய வேண்டிய காரியத்தை எண்ணினுள். அடுக்களை புகுந்தாள். நேற்றெடுத்த வெண்ணையை உருகவைக்கலாம் என்று வந்தாள். அவை உருகவில்லை. செய்வதறியாது வெளியே வந்தாள். துள்ளித்திரியும் ஆட்டுக் குட்டிகள் சோகமாய் முடங்கிக் கிடந்தன. கண்டாள். பதறிநடுங்கும் பசுக்களைப் பார்த்தாள். இவையனைத்தும் குழப்பமற்ற முடிவுக்கு அவளைக்கூட்டி வந்தன. 'வருவதோர் துயருண்டு' என்று சொற்கள் அவள் வாயிலிருந்து வந்தன.

மாலை வெண்குடைப்
 பாண்டியன் கோயிலில்
காலை முரசங்
 கனைகுரல் இயம்புமாகலின்
நெய்ம் முறை
 நமக்கின்றும் என்று
ஐயை தன்
 மகளைக் கூஉய்க்
கடை கயிறு
 மத்துங் கொண்டு
இடை முதுமகள்
 வந்து தோன்றும்
குடப்பால் உறையா;
 குவி இமில் ஏற்றின்
மடக்கணீர் சோரும்
 வருவ தொன்றுண்டு
உறிநறு வெண்ணெய்
 உருகா; உருகும்
மறிதெறித் தாடா!
 வருவ தொன்றுண்டு
நான்முலை ஆயம்
 நடுங்குஅ நின்றிரங்கும்
மான் மணி வீழும்:
 வருவ தொன்றுண்டு.

இப்பகுதியில் ஐயை முன்பு காணுது இன்று கண்ட தீய நிகழ்ச்சிகளை இயல்பாய் வாழ்

வொடு பொருந்திய பொருள்களின் வாயிலாய் ஆசிரியர் புலப்படுத்தி வருகிறார். அவள் அகத்திலும் புறத்திலும் மாறி மாறிக் கண்ட கண்ட காட்சிகள், உணர்ந்த உண்மைகள் அச்சத்தையும் அதனால் பிறந்த நடுக்கத்தையும் ஆகிய இவையனைத்துமே படிபடியாய் உயர்த்திக் கொண்டு போகக் காணுகிறோம்.

ஆயர் பாடியிலிருந்து அன்று உருக்கிய ஆநெய் அரண்மனைக்கு வருவதன் மூலம் ஐயைக்கும் அரண்மனைக்குமுள்ள தொடர்பைக் குறிப்பாய்க் கூறிச்செல்லும் ஆசிரியர் பிறிதொறி சமயம் பேசுவதற்கும் வழிசெய்து கொள்ளுகிறார்.

துன்பம் உண்டென உணர்ந்த மாதிரி ஐயையை நோக்கி "மகளே நீ, அஞ்சாதே; ஆயர்க்குரிய மாயக்கண்ணன் நம்மைக் காப்பான். ஆயிர் பாடியில் அன்றவன் ஆடிய கூத்துகள் பல. அவற்றுள் நம் மரிய நப்பின்னையுடன் ஆடிய குரவையைக் கண்ணகிகாண இன்று நாம் ஆடுவோம். அவ்வின்பத்தால் வரவிருக்கும் துன்பத்தைத் துடைப்போம," என்று கூறினாள்.

"பின்னைப் பிராட்டியின் ஏழு தோழியரும் ஏழுவகையான காளைகளை வளர்த்துவந்தனர். அவை ஏழையும் அடக்கி ஆளும் வீரனுக்கே எங்கள் பின்னை உரியவளாவாள் என்று கூறினர். அந்த வீர நிகழ்ச்சியிலே வெற்றிகண்டு பின்னையை மணந்தான் கண்ணன். அவர் ஆடிய குரவையை நாம் ஆடுவோம்" என்றாள் மாதிரி. அவ்வாறே ஆய்ச்சியர் எழுவர் கண்ணகியின் முன்னே வட்டமாய்க் கற்கடகக் கைகோத்து நின்றனர். அவர்களுள் ஒருத்தி மற்றொருத்தியை நோக்கி 'கொல்லை புனத்துக் குருந்தொசித்தாற்பாடுதும் முல்லைத் தீம் பாணி, என்றாள். கொல்லைப் புனத்திலே வஞ்சகமாய் வந்து நின்ற குருந்தமரத்தினை முறித்த மாயவனைப்பற்றி முல்லைப் பண்ணிலே இனிமையாய்ப் பாடுவோம் எனறு கூறினாள்.

அதற்கு உடம்பட்டமையைக் கூறும் மற்றொருத்தி

> கன்று குணிலாக்
> கனியுதிர்த்த மாயவன்
> இன்று நம்மானுள்
> வருமேல், அவன்வாயில்
> கொன்றையந் தீங்குழல்
> கேளாமோ தோழி

கன்றைக் குறுந்தடிபோல் வீசி விளாங்கனியுதிர்த்த கண்ணன் இப்பொழுது நம் வழிபாட்டால் இங்குவருவானேல் அவன் வாய்வைத்து ஊதுகின்ற கொன்றைக் குழலின் இனிய ஓசையை நாம் கேட்கலாம் என்றாள்.

> பாம்பு கயிறு
> கடல்கடைந்த மாயவன்
> ஈங்குநம் ஆனுள்
> வருமேல் அவன்வாயில்
> ஆம்பலந் தீங்குழல்
> கேளாமோ தோழீ

பாம்பைக் கயிறாகவும் மலையை மத்தாகவும் கொண்டு கடலைக்கடந்த மாயவன் இப்பொழுது இங்குவருவானானால் அவன் வாயினால் ஊதும் இனி

மையான ஆம்பல் குழலோசை யைக் கேட்போம என்று ஒருத்தி பாடினாள்.

கொல்லையஞ் சாரல்
குருந்தொசித்த மாயவன்
எல்லைநம்ஆனுள் வருமேல்
அவன் வாயில்
முல்லையந் தீங்குழல்
கேளாமோ தோழீ

கொல்லையிலே உள்ள புனத் திலே வஞ்சத்தால் வந்து நின்ற குருந்த மரத்தை முறித்த மாயவன நம வழிபாட் டிற்கு இரங்கி நம் ஆனிரையுள் வருவானானல் அவன வாய் வைத்து ஊதுகின்ற இனிமை மயமான முல்லைக் குழலோசை யைத் தோழி நாம் கேட்கலாம் என்றாள்.

ஆயமகளிர் பாடிய இவ்வரிய பாடல்கள் கற்கண்டின் எல் லாப் பகுதிகளும் ஒரேமாதிரி இனிமையாவது போல இனிமை பயக்கின்றன. கரும் பெனத் தித்திக்கும் இப்பாடல் களிலே மிதக்கும் கருத்துகள் நம்மறிவுக்குப் பொருந்தாதவை யாயுள்ளன. அறிவையே தெய் வமாகக் காண்பவர்களுக்கு இக் கருத்துக்கள் அரியனவாகவும் மாட்டா. கண்ணனது வருகை யிலும் அவன் கையிலுள்ள குழலிலும் உள்ளத்தைப் பறி கொடுக்கும் நிலை—அந்த இன் னிசையை வேண்டி நிற்கும் ஏக் கம் இவைகளுக்கு நன்கு உரு வம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

முல்லையந் தீங்குழல்; கொன் றையந் தீங்குழல்; ஆம்பலந் தீங்குழல் என மூன்று வகை யான குழல் கருவிகள் கூறப் படுகின்றன. ஆயர்பாடியி லுள்ள கோவலர்கள் முல்லைக் கொடியில் மூன்றை நாம்பாக வளைத்துக் கட்டி வாய்வைத்து ஊதி எழுப்பிய ஓசையே முல்லை யந் தீங்குழல் எனவும் ஆம்பல் மொட்டிலிருந்து எழுப்பிய ஓசை ஆம்பலந் தீங்குழல் என வும், கொன்றைப்பழத்தைத் துளையிட்டு ஊதி உண்டாக்கிய ஓசையே கொன்றையம் தீங் குழல் எனவும் நாம் அறிய முடி கிறது. முல்லைக்கொடியும் ஆம பல்மலரும் கொன்றைப் பழமும் அவர்கட்குக் குழல் ஊது கருவி யாயிற்று என்பதை நாம் எண் ணும் போது நாம் வியப்படை கிறோம். எளிய குடிமக்களிடமும் இசை குடிகொண்டதை நினைத் தால் நாம் பெருமிதமடை வோம. இவற்றை எல்லாம் நினைத்துப்பார்த்த பிறகு நம் உள்ளத்தில் எஞ்சி நிற்பது ஒருவகை ஏக்கந்தான். இத் தகைய கோவலர் பாணரது மரபு அழிந்து போனமையை எண்ணினல் நான் சொல்லிய ஏக்கந்தான் மிஞ்சும்.

இவ்வாறு ஆடிப் பாடிய ஆயமகளிர் யமுனை நதியிலே கண்ணனோடு நீர் விளையாடிய நப்பின்னையின் நிறத்தையும் அழகையும் நினைந்து பாடுகிறார் கள். பாடிவரும் பொழுது நப் பின்னையின் ஆடையைக் கொண்டொளித்த நம்பியின் வடிவழகைக் கண்டு புகழ்வதா? நப்பின்னையின் திருமுகத்தைக் கண்டு புகழ்வதா? எதைப் புகழ்வது என்று திணறிப் போகிறார்கள்.

இறுமென் சாயல்
நுடங்க நுடங்கி
அறுவை ஒளித்தான்
வடிவென் கோயாம்

அறுவை ஒளித்தான்
அயர் அயரும்
நறுமென் சாயல்
முகமென் கோயாம்

'ஆடை கொண்டொ'ளித்த காளையைப் புகழ்வதா? என ஒருத்தி சொல்லியவுடனே மற்றொருத்தி அவனை அயர்ந்து போகப் பண்ணிய அவள் திரு முகத்தைப் புகழ்வதா? என்று கூறுகிறாள். மற்றவர்கள் எதைப் புகழ்வது என அறிய மாட்டாது சோர்ந்து போகிறார்கள். இறுதியாகப் பாண்டியனையும், சோழனையும், சேரனையும் வாழ்த்திப் புகழ்வதன் மூலம் அவர்கள் கொற்றமும், வெற்றியும் பேசித் திருமாலின் கூறாக வைத்து முடிக்கிறார்கள்.

கோவா மலையாரம்
கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம்
தென்னர்கோன் மார்பினவே

என்று பாடும் ஆய்மகள் பொதிகை மலையிலே வளர்ந்த சந்தனமும் கொற்கைக் கடலிலே பிறந்த முத்தும் தேவர் கோன் வெருண்டு சூட்டிய மாலையும் பாண்டியன் மார்பிலே பொருந்திப் பிறழ்வதைப் பெருமிதமாய்ப் பேசுகிறார். பேசக் கேட்ட மற்றொருத்தி

தேவர்கோன் பூணாரம்
பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக்
குருந்தொசித்தான் என்பரால்

அத்தகைய பாண்டியனைத் தான் திருமால் அம்சமென்று கூறுகிறார்கள் என்றாள்.

மற்றொரு தோழியோ:

பொன்னிமையக் கோட்டுப்
புலிபொறித்து மண்ணாண்டான்
மன்னவன் வளவன்
மதில்புகார் வாழ்வேந்தன்

என்று சோழ மன்னன் இமயத்தின் உச்சியிலே தன் புலிக் கொடியை நாட்டி நாடு திரும்பிய வீரத்தை வியந்து பேசுகிறாள். அவனை யாரென்று நீ நினைக்கிறாய் என்று கேட்ட தோழி

மன்னன் வளவன்
மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னன் திகிரிப்
பொருப்புடையான் என்பரால்

அவனுந்தான் திருமாலின் அம்சம் என்று கூறுகிறாள். மற்றொரு ஆய்ப் பெண் இவர் இருவருமல்லாது சேரனும் திருமாலின் அம்சமே என்று கூறுகிறாள்.

முந்நீரினுள் புக்கு
மூவாக்கடம் பெறிந்தான்
மன்னர் கோச்சேரன்
வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர் கோச்சேரன்
வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவில் தோளோச்சிக்
கடல்கடைந்தான் என்பரால்

என இவ்வாறு சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவரையுமே வாழ்த்துவதன் மூலம் தமிழகம் முழுவதையுமே வாழ்த்துகிறார்கள். பிறகு கண்ணனை முன்னிலைப் படுத்தி உருக்கமாய்ப் பாடினர். தமக்கும் ஆனிரைகட்கும் நேரும் துன்பம் நீங்குவதாக என்று குரவைக் கூத்தை முடித்தனர்.



இருபத்தாறும் அத்தியாயம்
நச்சுக் கோப்பை!

வைத்தியர் வரப்பிரசாதர் அந்தப்புரத்திற்குள் நுழைந்தார். அங்கு அழகான கட்டிலில் அலிவர்திகான் கிடத்தப்பட்டிருந்தான். அருகில் நளினி உட்கார்ந்துகொண்டிருந்தாள். சில பெண்கள் அங்கும் இங்கும் சிதறி நின்றனர். வைத்தியர் நோயாளியருகே சென்று நாடித் துடிப்பை நன்றாகச் சோதித்தார். நாக்கின் நிலைமையால் நோயின் நடப்பைக் கணித்துக்கொண்டார். வயிற்றின் அடிப்பாகத்தைத் தட்டிப் பார்த்தார். பிறகு சிறிது யோசித்தார்!

அப்பொழுது அங்கு திவான் மோஹன்லால் வந்து நுழைந்தார்.

“மருத்துவரே, சுபேதாரின் உடல் நிலை.........”

“மோசந்தான்”

“உங்கள் திறமைக்கேற்ற தேர்வு இப்பொழுது”

“இதில் என்னால் 50 அம்சம் வாங்குவதும் கடுமை”

“சரி, ஏதோ முயற்சி செய்கிறேன்”

மருத்துவர் தனது மருந்துப் பெட்டியைத் திறந்தார்.

அதிலிருந்த ஒரு சிறு பொட்டலத்தை எடுத்து நளினியிடம் கொடுத்தார்.

"இதனைத் தேனில் குழைத்துக் கொடுக்கவேண்டும். மாலையில் வந்து பார்க்கிறேன்."

திவானும், மருத்துவரும் வெளியில் வந்தனர். வரும் வழியில் அவர்கள் பேசிக் கொண்டே வந்தனர்.

"சுபேதாருக்கு ஏதேனும் மனக்கவலை இருக்குமோ?"

"இல்லாமல் என்ன, தனது பேரனைப் பார்க்க வேண்டும் என்ற பேரவா இருக்கிறது"

"அவர்களை அவசியம் வரவழையுங்கள்!"

"அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி கிடைத்துள்ளது"

வைத்தியர் சற்றுக் கனத்த குரலுடன் அழுத்தந் திருத்தமாகவே பேசினார். அவர்மேலும் ஒரு கேள்வியைத் திடீரென்று கிளம்பினார்!

"சுபேதார், இறந்துவிட்டால் யாருக்கு இலாபம்? அவர் சாவைத் துரிதப்படுத்த ஆசைப்படுபவர்களும் அரசாங்கத்திலிருக்கிறார்களா?"

திவான் சிலையானார். வழியிலே நின்று விட்டார்.

"ஏன்.........?"

"அவரது வாழ்வை நான் நீட்டினால், என் வாழ்க்கை நாளை வெட்டி நறுக்கிச்சுருக்கி விடுவார்களாம் மாறு வேடத்தில் இரவில் வந்து பயமுறுத்துகிறார்கள்!"

"நீர் எதற்கும் அஞ்சவேண்டாம். நானிருக்கிறேன். அந்த வஞ்சக வட்டாரத்தை வெட்டிப் புதைக்க வெகு விரைவில் ஒரு திட்டம் தீட்டுகிறேன்"

இருவரும் பிரிந்தனர்.

வைத்தியர் வரப்பிரசாதர் அமீன்சந்தின் மிரட்டுதல்களால் நடுங்கிப்போனார். ஆனால் அவரது மனச்சாட்சி அவரைக் கிள்ளிக்கொண்டே இருந்தது! ஆகவே அவர் வெகு நேரம் யோசித்தார்! சுபேதாரைக் கொன்றுவிட்டுப் பழியை நம் மீது போட்டால் என்ன செய்வது? அமீன்சந் எதற்கும் துணிந்தவன்! வஞ்சகமாக நஞ்சிட்டுக் கொல்வது தியாகமாம், தேசத் தொண்டாம! இதுதான் ஆரியச் சூழ்ச்சி. ஆரிய வஞ்சகர்களின் அநியாயத் திட்டம்...... எண்ணினார். பிறகு ஒரு முடிவிற்கு வந்தார். எப்படியும் முன் கொடுத்த நஞ்சிற்கு மாற்று முறிப்பு மருந்து கொடுத்துவிடுவது என்று எண்ணி விட்டார். ஆகவே தான் திவானிடமும் செய்தியைச் சொல்லி வைத்தார்.

மாலை வந்தது.........

வரப்பிரசாதர் மீண்டும் வந்தார். இப்பொழுது கையிலே இரண்டு பாட்டில்கள் கொண்டு வந்தார். ஒன்று நஞ்சு, பிறிதொன்று நஞ்சைக்கொன்று நல்ல இரத்தம் பாய்ச்சும் முறிப்பு மருந்து! நளினி வரவேற்றாள். வைத்தியர் ஒரு கண்ணாடிக் கோப்பையை வரவழைத்தார். அதில் மருந்தை ஊற்றப் போனார். அலிவர்திகானோ சுயநினை விழந்து கிடந்தான். நளினி வைத்தியரின் முகத்தை அப்படியே சித்திரம் வரைவதற்காகக்கூர்ந்து பார்க்கும் சைத்திரீகனைப் போலப் பார்த்தாள்.

பிற்கு சட்டென்று அவரது கையைப் பிடித்தாள்.

"ஏன் இப்படி ஏமாற்றுகிறீர்?"

"என்ன?............"

"இது அமீன்சந்த் கேட்ட அவுடதமா?"

அவர் விழித்தார். அவள் கோப விழி வீசினாள். அவள் திவானுடன் பேசிய உரையாடலை உடன் வந்தே ஒட்டுக் கேட்டாள் என்பது யாருக்குத் தெரியும்? வைத்தியர் பேசிய வார்த்தைகளைக் கூர்ந்து கேட்க அவள் சந்தேகப்பட்டு விட்டாள். ஆகவேதான் அப்படி மறித்து நிறுத்தினாள்!

நளினி அவரது கன்னத்தைக் கிள்ளிவிட்டுச் சிரித்தாள். கிழவர் தடுமாறினார்!

"சரி, இந்தா அவர் கேட்ட அவுடதம்"

நஞ்சை அவரது நடுங்கும் கரங்கள் ஊற்றித் தந்தன. நளினி அதனைத் தன் கையிலே வாங்கினாள். பிறகு அலிவர்தி கானைத் தூக்கத்திலிருந்து எழுப்பினாள். அவன் பார்வை பஞ்சடைந்திருந்தது! அவனை மெதுவாகத் தூக்கி அமரச் செய்தாள். அவனோ அவள் தோள்மீதே துவண்டு விழுந்தான். அவன் முகத்தைத் திருப்பி அந்தக் கோப்பையை அவனது உலர்ந்த உதடுகளில் பதித்தாள். அவன் மெதுவாக "மொடக், மொடக்" கென்று குடித்தான். அவளது மலர்க் கரம் அவனது மார்பைத் தேய்த்துவிட்டது! அந்தோ, சிறிது நேரத்தில் அவன் கண்கள் தானே மூடிக்கொண்டன. அவள் அவனைத் தழுவலிலிருந்து தலையணையில் தலையை வைத்துப் படுக்க வைத்தாள். அவன் மூச்சு மெதுவாக வந்துவந்துபோய்க் கொண்டிருந்தது.


இருபத்தேழாம் அத்தியாயம்

திரும்பினார்!

ஸுராஜும், முடினும் 'ஐயோ' என்று பதறி விட்டனர்...............

செத்தவள் எழவா போகிறாள்? சிறிது நேரம் கண்ணீர் விட்டனர். அவளை அந்தப் பஞ்சணையில் கிடத்தினான் ஸுராஜ். ஆனால் முடின் சாளரத்தை நோக்கினான். அங்கே சோணியின் முகம் தெரிந்தது. அவனை ஓடிப் பிடிக்கவேண்டும் என்று எண்ணி வெளியில்வந்தான். ஆனால் எப்படி அந்த இடத்தைவிட்டு மறைந்தானோ தெரியவில்லை. அவன் 'அந்தர்த்யானம்' ஆகிவிட்டான்!

முடின் திரும்பிவந்தான். ஸுராஜ் அந்த வதங்கிய மலரின் இதழிலே தேனிருக்குமா என்று தேடிக்கொண்டிருந்தான். அவன் கண்களில் நீர் வற்றிவிட்டது! மதுக் கோப்பைகளைப போல மங்கையரை மதித்து வந்த அவன், அன்று அவளின் சாவுக்காக அழுதுவிட்டான். ஆம், அன்றைய அனுபவம் அவனுக்குப் புதிது! பஞ்சணையில் கொஞ்சலும், மிஞ்சலும், பிறகு அஞ்



சலும்,......அவன் கண்டவை! கத்தி வீச்சோ, வீரவுரையோ, பிறகு இரத்த வெள்ளத்திலே பிணமோ கண்டதில்லை. காணுவோம் என்று எதிர்பார்க்கவுமில்லை. அவன் நண்பன் அவனை மெதுவாகத் தட்டினான்.

"ஸுராஜ், இனி நாம் காலங் கடத்துவது முறையல்ல!"

"பாதுஷாவின் வேண்டுகோள்தான் இந்த விபரீத அனுபவத்திற்கெல்லாம் காரணம்"

"பாதுஷா நள்ளிரவில் நமக்கு உத்தரவு கொடுத்துவிட்டார். நடந்ததைப் போகும்பொழுது சொல்லுகிறேன். புறப்படுங்கள்."

இருவரும் புறப்பட்டனர்.

நாட்கள் புரண்டோடின. அவர்கள் பயணமும் கடுவேகமாக ஓடிக்கொண்டிருந்தது!

இடையிலே வந்த சாவடிகள், மண்டபங்கள், தங்குமிடங்கள் எங்கும் அவர்கள் அதிக நாட்கள் தங்கவே இல்லை. அவர்கள் எண்ணமெல்லாம் மூர்ஷிடாபாத்தில் சென்று பதிந்திருந்தன! அவர்கள் எப்பொழுது அலிவர்திகானைச் சந்திப்போம் என்று தவித்தனர். வங்கத்தின் உள்நாட்டு விவகாரங்கள் புகைந்துகொண்டிருக்கின்றனவா, எரியத்தொடங்கிவிட்டனவா என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் குதிரைகளும் தங்கள் தாய் நாட்டிற்குப் போகிறோம் என்ற

எண்ணம் உந்த, உந்த ஓட்டம் ஓட்டமாகப் போய்க்கொண்டிருந்தன.

அவர்கள் தலைநகரை நெருங்கிக்கொண்டிருந்தனர். இன்னும் ஒரு நாள் பயணத்தில் ஊர் சேர்ந்துவிடலாம். ஆகவே அவர்கள் உற்சாகமாகவே போய்க்கொண்டிருந்தனர்.

அந்தப் பாதையின் நடுவழியே ஒரு கட்டைவண்டி குடைசாய்ந்து கிடந்தது.

இருவரும் அங்குபோய்க் குதிரைகளை விட்டிறங்கினர். அவர்கள் நடந்த விபத்தின் விபரத்தை அறியப் பார்த்தனர்.

பாதையின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்த ஒருவன் ஓடிவந்தான். அவன் முகத்தில் பரபரப்பு 'வெளிச்சம் போட்டது' அவன் ஒரு பட்டிக்காட்டுச் சிறுவன் போலிருந்தான்.

"ஐயோ, இந்த வண்டியில் பூட்டப்பட்டிருந்த காளைகள் மிரண்டோடி விட்டன. சுபேதார் அலிவர்திகான் சாகக் கிடக்கிறார். இந்த வண்டியில் வந்த வைத்தியர் அடிபட்டு அவரை ஒரு வைத்தியர் வீட்டிற்கு அனுப்பிவிட்டேன். நான் மூர்ஷிடாபாத் போயாகவேண்டும். என்னை அழைத்துப்போங்களேன்!" என்று கூவினான்.

இருவரும் திடுக்கிட்டனர்.

"நீ வந்து விட்டால் வண்டி என்ன ஆவது? அப்படிப் போவதானால் அந்த அடிபட்ட வைத்தியர் சென்ற வண்டியிலேயே போயிருக்கலாமே!" என்றனர்.

"காளைகளைப் பிடித்து விடலாம் என்று நினைத்தேன். அவைகள் கிடைக்கவில்லை"

அவனை முடின் குதிரையில் ஏற்றிக்கொண்டான். பிறகு இருவரும் துரிதமாகத் தலைநகர் நோக்கி நடத்தினர். போகும்பொழுது அவர்கள் தலைநகர் சென்றவுடன் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றிப் பேசிக்கொண்டே சென்றனர்.

முதலில் அலிவர்திகானைச் சந்திக்கவேண்டும், பிறகு திவானைக் கலந்து பேசவேண்டும், அப்புறம் அமீன்சந்த்தை அழைத்துவரச் செய்து, அந்தக் கடிதத்தைப் பற்றிக் கேட்க வேண்டும், பிறகு வெள்ளைக்காரர்கள் விவகாரத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்... என்று திட்டமிட்டுக் கொண்டே சென்றனர். இவர்கள் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த அந்த வாலிபனின் முகம் விகாரத்தை விசிறிக்கொண்டிருந்தது.

அவர்கள் தலைநகரின் கோட்டை வாயிலையடைந்ததும் அவனை இறக்கிவிட்டனர். பிறகு அவனைப்பார்த்து முடின் ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தான்!


"உன் பெயர் என்ன?"

"என் பெயர் சந்த்"

அப்பொழுது ஸுராஜ்

"போகும்பொழுது சோணி, வரும்பொழுது சந்த்" என்றான்.

[தொடரும்]



உயர்திரு உல்லாசம் அவர்களுக்கு

11. படையெடுப்பு

நான் எல்லோரிடமும் 'நல்ல பிள்ளை' என்ற பெயரெடுத்தேன். என் வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டு வெளியேறும்போதுகூட எஜமானரிடம் 'நல்ல பிள்ளை' என்ற பட்டத்துடன்தான் வெளியேறினேன். ஆனால் பெண்ணுலகம் மட்டும் எனக்கு நல்ல பிள்ளை என்ற பட்டம் தர மறுத்துவிட்டது. என் மனக்கோட்டைகள் எல்லாம் தகர்ந்துபோய் விட்டன. கூடிவரும் காலத்தில் குருநாதன் கால் வைத்ததுபோல, வெண்ணை திரண்டு வரும் பொழுது தாழி மட்டும் உடையத் தவறவில்லை.

இந்நிலையில் ஒரு உண்மையான லட்சியவாதியைப்போல புகைபடுமனத்துடன் நாடோடி வாழ்க்கை நடத்திவரும் நான், அன்றாடம் உம்போன்ற உல்லாசங்கள் செய்துவரும் காதல் திருவிளையாடல்களைக் காணும்போதெல்லாம் கலங்குகிறேன். காரணம்? என் சொந்த அனுபவத்தினின்று தெரிந்துகொண்ட படிப்பினைதான். உண்மையைச் சொல்லுகிறேன். அநேக தடவைகள் முயன்று பார்த்தேன். வெற்றி மட்டும் கிட்டியதே இல்லை!

நான் என் முதற் படையெடுப்பை ஒரு நாட்டுப்புற நங்கையிடம் ஆரம்பித்தேன். ஆம். அவள் என் எஜமானின் பண்ணையில் வேலைபார்க்கும் கூலியாள். கட்டுமஸ்தான தேகம். குறுகுறுப்பான பார்வை. வயது பதினாறு. கலகலப்பாகப் பேசினாள். இதைவிட வேறு என்ன வேண்டும்? திராட்சைப் பழங்கள் கைக்கெட்டும் தூரத்திலிருந்தால் நரி 'புளிக்கும்' என்று சொல்லிப்போய் விடுமா? ஆகவே நானும் பேசினேன். அவள் வீட்டிற்கும் அடிக்கடி சென்று வரலானேன்.

ஆனால், நான் எனது 'சின்ன எஜமானின்' கையாள் என்பதற்காக, அந்தப் பெண்ணின் முட்டாள் தந்தையால்

வெறுக்கப் பட்டேன். இனி அந்த வீட்டு வாசலில் காலெடுத்து வைக்கக்கூடா தென்பது எனக்கிடப்பட்ட கடுமையான உத்தரவு.

என்றாலும் உலகத்திலேயே ஆண்பெண் உணர்ச்சி அற்றுப் போய்விட்டதா? அன்றாடத் 'திருக்காரியங்கள்' நடைபெறுமலா இருக்கின்றன? நான் மட்டும் விதிவிலக்கா? ஆகவே திருட்டுத்தனமாகச் செல்ல ஆரம்பித்தேன். ஒரு தினம் அந்த 'நாட்டுக்கட்டை' என்னைப் பார்த்துவிட்டான். அவனுக்குக் கோபம் மேட்டூர் அணையையும் மீறி வெள்ளம் வருவதுபோல வந்தது. அதனால் எனக்கொன்றும் நஷ்டமில்லை. அவனுக்குத்தான் இரண்டு செருப்புகள் நஷ்டம்!

இரண்டாவதாக, ஒரு விதவையைக் காதலித்தேன். ஆ, காதலித்தேன் என்று சொல்லிவிட்டேன்? அது தப்பு. அவளுக்கு நிலபுலன்கள் ஏராளம். ஒண்டிக் கட்டை. வயது முப்பதுக்குக் குறையாது. ஆகவே அவள் மீது என் இரு கண்களையும் வீசினேன். சந்திப்பு வளர்ந்தது. பிறகு——

விதவா விவாகத்தைப்பற்றி வீராவேசத்தோடு பேசினேன். மறுமணத்தின் அவசியத்தைப்பற்றிப் பலமாக வாதாடினேன். அவளும் நான் சொன்னதையெல்லாம், தன் பொக்கை வாயைத் திறக்காமல் புன் சிரிப்போடு ஆமோதித்தாள்.

ஒரு நாள் எனக்குச்சோதனை காலம். அவள் தன்னுடைய சொத்துக்களை யெல்லாம் நந்தனர் விடுதிக்கு எழுதிவைக்கப் போவதாகச் சொன்னாள். எதற்கெழுதித் தொலைத்தால் எனக்கென்ன? அந்தப் 'பிரமாத கைங்கரியத்திற்காக' நான் ஒரு வக்கிலைக் கூட்டி வரவேண்டுமாம். நான் அற்குப் பிறகு, அவளைப்பற்றியோ, அவள் கூட்டிவரச் சொன்ன வக்கிலைப் பற்றியோ நினைக்கவே இல்லை. காரணம்? நான் நந்தனர் விடுதியாக முடியுமா?

மாதங்கள் உருண்டன, பஞ்சாப் பிராந்தியங்களிலே உருண்ட மண்டைகளைப்போல. சினிமாக்களுக்குத் தவருமல் செல்ல ஆரம்பித்தேன், வேட்டைக்காக. சினிமாவைப்போல் சிறந்த 'வேட்டைக்காடு'வேறெதுவும் இருக்க முடியாது என்பது என் பரந்த அனுபவம்!

என் வலையில் ஒரு கன்னிப் பெண் சிக்கினாள். நாகரிக யுவதி. ஒரு பேர்பெற்ற பள்ளிக்கூடத்துப் பூகோள ஆசிரியை. வயது இருபத்தைந்திற்குமேல் போகாது. ஆனால் இன்னும் கன்னி கழியாப் பருவம்! என்னை அறிமுகப்படுத்தினேன். அவளுக்கு நாடகமும் கூத்தும் என்றால் மிகப் பிரியம் என்பதை அறிந்துகொண்டேன். உடனே அன்றுமுதல் ஒரு சிறந்த ரசிகனாகிவிட்டேன்.

கலைப்பித்து தலைக்கேறிவிட்டது. அந்த மூளைக்கொதிப்பை முறியடிக்க அந்தக் கன்னியின் அமுத கலசந்தான் சிறந்த மருந்தாகும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அரிய சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்தினேன். அடிக்கடி ஆங்கிலப் படம் பார்ப்ப

தற்காகவே அயலூருக்குச் செல்லுவோம்.

இப்படியே இந்தக் கல்வி கற்ற கன்னியுடன் என் காலத்தைக் கடத்தி விடுவதென்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தேன். மறுதினம் அவளது வீட்டிற்குச் சென்றேன். வாசலில் வேலைக்காரி கையில் வீடு துடைக்கும் வெண்சாமரத்தோடு காத்துக் கொண்டிருந்தாள்.

இரவோடிரவாக, எதிர்த்த வீட்டில் குடியிருந்த ஒரு சினிமாக்காரனோடு 'அம்மா' ஓடிப போய்விட்டதாகக் கேள்விப் பட்டேன். வேலைக்காரி வீட்டு வாடகைக்காக, 'வாடிக்கைக் காரனுகிய' என்னிடம்——அவ்வளவுதான்! இப்பொழுது அந்த வீட்டின் விலாசமே எனக்குத் தெரியாது. நான் என்ன அலாவுதீன் தீபமா? வெறும் மின்சார விளக்குத் தானே!

அதன் பிறகு என் 'காதல் நீரோடை' ஒரு பிரபல பங்களாவைச் சுற்றி வளைந்து ஓட ஆரம்பித்தது. அங்கே ... ... மற்றுமோர் விதவைப் பெண்; ஆனல் குரூபியல்ல; சகோதரர் மூவர். இருமலின் இரும்புப் பிடியில் சிக்கிக்கிடக்கும் தாய்க் கிழவி. இடையில் நுழைந்த நான்-இதுதான் அந்தப் பங்களாக் குடும்பம்!

கூடப் பிறந்த தம்பிகளின் கண்களுக்கு நான் குலவிளக்காக விளங்கினேன். வயதில் மூத்தவர் கொஞ்சம் முரட்டு சுபாவம் உடையவர். அவரது 'காக்டெயில்' பார்ட்டிக்கு நான் தான் காரிய கர்த்தா. இரண்டாவது சகோதரர் ஒரு டாக்டர். பங்களாவிற்கே வரமாட்டார். 'தானுண்டு தன் கொலையுண்டு' என்று மருத்துவசாலையிலேயே தங்கிவிடுவார். மூத்தவர் இன்னும் பிரம்மச்சாரியாகவே இருந்து வருகிறார். சகோதரி விதவையாகிவிட்ட வருத்தமாம்! பைத்தியக்காரர்! தொட்டுத் தாலி கட்டினுல் தானு? அவர் பெயரே கண்ண பிரான். 'கோபியர்'களுக்குத் தான் பஞ்சமா அந்த ஊரில்?

இளையவரோ 'கோணலெழுத்துப்' படிக்கப் பட்டணம் போயிருக்கிறார். படிக்கிறாரோ அல்லது 'புதுப்பாடம்' பழகுகிறாரோ எனக்குத் தெரியாது. ஆனல் மாதம் ரூ 200 அனுப்பிக் கொண்டிருப்பவன் நான் தான்.

ஆகவே இத்தகைய "நல்ல குடும்பத்தில்" எனக்கு ஒரு ஒதுக்கிடம் கிடைத்ததில் ஆச்சரியமில்லை. நானே அக்குடும்பத்தின் ரீஜெண்டாக மாறிவிட்டேன். கவலையில்லாத வாழ்க்கை! பணத்திற்குப் பணம்! இன்று அதிகமாகச் செலவழித்துவிட்டோமே என்ற கவலையைப் போக்க மூத்தவருடன் 'சீமைவிருந்து'. உலகம் வெறுப்பதுபோல் தோன்றிவிட்டால், மருத்துவசாலையும் அங்கிருக்கும் 'பணிவுள்ள' தாய்மார்களும்!

இவ்வளவு செல்வாக்கு, சுகம் இருந்தும் என்னுடைய அந்தரங்க எண்ணம்......ஆம். அதுதான்! என் திறமையை எல்லாம் ஒன்று கூட்டி ஒரு சக்தியாக மாற்றி, அந்தத்

தாலியிழந்த தையலின் மேல் பிரயோகித்தேன்.

பாவம்! உலகம் உருண்டை என்று தெரியாத பெண். எப்பொழுது பார்த்தாலும் இதிகாச புராண உபதேசங்கள் தான்! ராகம் போட்டு ராமாயணம் படிப்பதும், லளிதமான நடையிலே பாகவதத்தைப் பக்குவமாகப் போதிப்பதும், நான்தான். வேறு யார் இந்தப் பஜனை வாழ்க்கையை மேற்கொள்ள முடியும்? கதியிழந்து, விதியென்னும் சதிச் சுழலிலே சிக்கி வாழும் கன்னிகளை மயக்க, காரிய வாதிகள் கையாளும் ஆயுதங்கள் இராமாயணமும் பாரதமுந்தான்.

ராமன்—சீதை சந்திப்பு, துரோபதையின் பதிவிரதா மகிமை(!), அகலிகை காதல், அனுசூயைப் பெருமை—இவைகளை அனுதினமும் அருமையாக எடுத்துச் சொன்னேன். அந்த நேரங்களில் அவள் கண்கள் கர்தல் ஒளியை வெளியிடும். மார்பு விம்மிப் புடைக்கும். என் கண்கள் இந்த அடையாளங்களைக் கவனியாமல் இல்லை. ஆகவே முற்றுகையிட ஒரு நல்ல நாளை எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன்.

ஒரு நாள்...... நேரில்கேட்டு விடுவதென்று அவளிடம் சென்றேன். சிரமப்பட்டு மனப் பாடம் செய்து வைத்திருந்த வர்ணனைகளை யெல்லாம் நான் ஒப்புவிக்கும்வரை மௌனமாக இருந்துவிட்டு, அந்த 'ஆண்டாள்' பேச ஆரம்பித்தாள்.

"நாளைக்கு என் அத்தை மகன் வருகிறார்..."

"எதற்கு..."

நிழல்

நிழலே தூய்மையானது; நலன் தருவது; மாசற்றது; மிகச் சிறந்தது. அமைதி நிறைந்தது. கறைப்படுத்த முடியாதது. பாம்பின் நிழலிலே நஞ்சிருப்பதில்லை. புலியின் நிழலிலே அதன் கொடூரப் பசியில்லை. வெறுக்கத் தக்க புரோகிதனின் நிழலிலே அவனது இழிதன்மை-சூரண்டும் பண்பு இல்லை. கோயிலின் நிழலிலே அதனுள்ளே நிகழும் அக்ரமக் களங்கமில்லை. சர்க்கார் அதிகாரியின் நிழலிலே அவன் உள்ளத்திலுறையும் தொழுநோயில்லை. பாசாங்குப் பக்தனது நிழலின் நெற்றி அவனது பட்டைநாமம்-திருநீறு-சாதிக் குறி இவைகளின் களங்கத்தை உதறி எறிந்துவிடுகிறது. நிழல் எவ்வளவு பெரு வியப்பான பொருள்.

-ஸரீந்திரநாத சட்டோபாத்யாயா

●

ஒவ்வொரு மதமும் உலகத்தில் நிலவுகின்ற எல்லாப் பேய்க் குணங்களுக்கும் காரணம் பெண்கள் இழைக்கிற குற்றமே என்று கூறுகிறது. எவ்வளவு வீரத்தனமான செய்தி இது! இஃது உண்மையாயிருக்குமானால், நான், துன்பம், நிறைந்த ஓர் உலகத்தில்,என்னால் விரும்பப்படுகிற ஒரு பெண்ணுடன் வாழ்வேனே த்விர, வேறொருவருமில்லாமல் ஆண்கள் மட்டும் நிறைந்துள்ள தெய்வலோகத்தில் வாழ்வதை விரும்பமாட்டேன்.

— இங்கர்சால்

"அவரே என்னை மறுமணம் செய்துகொள்ளப் போகிறார். நானும் ஒப்புக்கொண்டு விட்டேன்"

"அப்படியானால் நான்..."

"விவாகத்தன்று விருந்துண்டு செல்லலாம்"

அதற்குமேல் நான் அங்கு நிற்கவில்லை. எதற்காக நிற்க வேண்டும்? நன்றிகெட்ட உலகம்.

இதைப் போல நான் இன்னும் எத்தனையோ தோல்விப் படலங்களைச் சொல்லிக் கொண்டுபோகமுடியும். ஆனால் எல்லாவற்றையும் கூறி, என்னை ஒரு 'இமாலய ஏமாளி'யாக்கிக் கொள்ள எனக்கு இன்னும் பைத்தியம்பிடிக்கவில்லை. ஆனாலும் கடைசியாக ஒரே ஒரு சாம்பிள்!

சித்திரைத் திருவிழா ஆரம்பமாயிற்று என்றால், சிங்கார புருஷர்களின் 'சீசன் காலம்' ஆரம்பமாயிற்று என்றுதான் அர்த்தம்! பல்லாயிரக்கணக்கான மக்களிடையே நானும் எறும்புபோல 'இரை' தேடிச் சென்று கொண்டிருந்தேன்.

அன்று ராமராயர் மண்டபத்தில் ஒரே கூட்டம்! தசாவதாரம்! வலைவீசு படலம், காட்சிப் படலம், கைவீசு படலம், 'கனிகள்' பிழியப்படும் படலம், கூக்குரல் படலம், தடுமாறி ஓடும் படலம், பக்தர்கள் பரவசமாகும் படலம்... இத்யாதி.

கூட்டத்தில் சிக்கிக்கொண்டு தசாவதாரத்தில் ஒவ்வொரு படலத்திற்கும் ஆளாகிக் கொண்டுவந்த ஒரு பூங்கொடியைக் கொஞ்சம் சிரமப்பட்டு அந்த ஊமைக் களியிலிருந்து காப்பாற்றி, மணல் வெளிக்குக் கொண்டு வந்தேன்.

ஆபத்து நேரத்தில் உதவிய ஆபத்பாந்தவனாகிய எனக்கு அந்த மங்கையை அருகில் வைத்து மனைவியாக்கிக் கொள்ள வேண்டுமென்று ஆசை. ஆனால் அந்த இல்லாத தெய்வம், எங்கோ இருந்துகொண்டு எனக்கெதிராகச் சதிசெய்யுமென்று நினைக்கவே இல்லை. இரவு ஒரு மணி வரைக்கும் என்னிடம் சரஸமாடிய அந்த மங்கை, சட்டென்று எழுந்து அவர் காத்துக்கொண்டிருப்பார். "வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அந்த ஜனக் கூட்டத்தில் மறைந்துவிட்டாள் ஏககாலத்தில் 'டபிள் நிமோனியா' வந்தவனைப்போல் செயலற்று விழுந்தேன்.

இன்று நாணயஸ்தனாக இருக்கிறேன். ஏனென்றால் இன்றைய உலகம் விழித்துக் கொண்டது. எத்தர்களின் வாழ்வு அஸ்தமித்துக்கொண்டிருக்கிறது. அதனால்தான்!

கடமை என்னும் மலையிலேயிருந்து, வழிந்தோடிவரும் என் வாழ்க்கை ஆறானது கரடுமுரடான வழிகளையும் பாறைகளையும் ஊடுருவிப் பாய்ந்து, இப்பொழுது ஜனசமூகம் என்னும் கடலுள் ஐக்கியமடைந்துவிட்டது. கரை காணாப் பொது நலத் தொண்டு எனுங் கப்பலில் முழுநேரப் பிரயாணியாக இன்று நான் மக்களிடையே உலவுகிறேன். கற்பனைகளைத் தழுவி, அந்தகார இருளில் மறைந்துபோகா வண்ணம் உம்போன்ற உல்லாசங்களை எச்சரிக்கிறேன்.

வணக்கம்,
வழிப்போக்கன்



பரமானந்தர்

— நா. பாண்டுரங்கன் —

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

பரமானந்தர் அடுத்த வயலுக்குப்போக வரப்பில் நடந்தார். கார்வாரி, குடையை அவர் தலைக்கு நேரே பிடித்துப் போய்க்கொண்டிருந்தார். முனியன், ஏரை ஒரு புறமாக நிறுத்திவிட்டு, ஓடிவந்தான். அவர்கள் பின் நடந்தான்.

"ஆண்டே!......ஆண்டே..." பரிதாபக்குரலில் முனியன்.

"படு படு! மாமனைச்சேன்னு என் பேச்சை மதித்தாத் தானேடா......" உலகப்பனின் அநுதாபத் தீர்மானம்!

"கூத்துப்பார்க்கவாபோறுரு துரை! கூத்துப்பார்த்துக் கிட்டே இருக்கட்டும்... கூத்து என்னடா கேக்குது உங்களுக் கெல்லாம..." பரமானந்தரின் கொந்தளிப்பு!

"ஆண்டே! ஆண்டே! நாலு அடியாவது கொடுங்க ஆண்டே! கூலியை மட்டும் பிடிக்கச் சொல்லாதீங்க ஆண்டே! இது போல் இனிமேல் நடக்கமாட்டேன். இரக்கம் காட்டுங்க ஆண்டே! மன்னிச்சுவிடுங்க......" முனியன பரிதாபமாகக் குளறினான். அவனைப் பார்க்காமலே, நடந்துகொண்டிருந்தார் பரமானந்தர், பேசிக்கொண்டே! "மன்னிப்பா! மன்னிப்பு மறந்து போயிடும். தண்டனை தான நிலைச்சு நிக்கும்......"

"ஆண்டே! ஆண்டே......" முனியன் கூவினான. கார்வாரி, பரமானந்தர் இருவருமே திரும பினார்கள். அப்படி இருந்தது அவன் குரல்!

"ஆண்டே, ஆயுள் பூராவும் உழைக்கிறேன் உங்களிடம, செக்குமாடுபோல! தினமும் காலையில் எழுந்திருக்கிறேன். நினைப்பில் வருவது, கலப்பை! மண்வெட்டி! வயல்! மாடு! இது இல்லாவிட்டால், தளர்ந்த உடலுடன் இருக்கும் என் தாய், நோயால் நொந்து கிடக்கும் என் தந்தை,—இடிந்த சுவருள்ள கூரை, இவைதான் என்நினைப்பில் நின்றுடும்! பங்களாவோ, பளபளப்பானகாரோ, இரும்புப் பெட்டியோ, பணக் குவியலோ, மலர்த்தோட்டமோ மலர்முகவதியோ,—என் நினைப் பில்நின்று, ஆனந்தம்சொரிந்து கொண்டிருக்க, நான் என்ன, உங்களைப்போல், ஆண்டையா? அன்னக்காவடி! அலுத்துக் களைத்த உள்ளத்திற்குச் சிறிது மாற்றுக்கொடுக்க, வெளியே கொண்டு வந்து தீர்த்துக் கொள்ள முடியாத வேதனையை மறக்க, ஓர் ஆறுதலுக்காகக் கூத்துப் பார்க்கப் போனேன். எப்பொழுதும் போவதில்லை. என்றோ ஓர் இரவு போனேன்! பொழுதைப்போக்க அல்ல. அழுகையை நீக்கப் போனேன்!

தூக்கம் வராததால் அல்ல, ஏக்கம் இருந்ததால் போனேன்! ......கண் விழிக்கும்போது கஷ்டம் தெரியவில்லே. காலேயில் ஏரைப் பிடிக்கும்போது தான் கண் சுத்தியது. கஷ்டப்பட்டு காலே வேலேயை முடித்துக் கொண்டு, கூழைக்குடித்து விட்டு, அதோ, அந்தத் தோட்டத்து, மர நிழலில் தான் ஆண்டே, சற்று உடலே நீட்டினேன். ஐந்து நிமிஷத்தில் எழுந்து விடலாம் என்று தான் படுத்தேன். எழுந்து பார்த்தேன். நிலவும் கிளம்பிக்கொண்டிருந்தது! என் விழியில் நீரும் கிளம்பிக் கொண்டிருந்தது!! குற்றம் செய்யவில்லே ஆண்டே நான்! தவறு செய்து விட்டேன்! தண்டனையா இதற்கு? தருமா? சொல்லுங்கள்! உங்கள் உள்ளம் என்ன கல்லா? நீங்கள் விதித்தது தண்டனேயா? இல்லே, கொள்ளே!''

முனியன் இப்படி ஆண்டையைப் பார்த்துக் கூறவில்லே. ஆனால், அவன் 'ஆண்டே! ஆணடே' என்று கதறினுனே, அந்த வார்த்தையை எடுத்து வைத்துப் பிரித்துப் பார்த்தால், மேற்சொன்னவைகளே, அதில் காணலாம்!

......"தட்டி ஓட்டுடா தருமா! எட்டுமணிக்கு வந்து இப்படி எருமைமாதிரி அசைஞ்சா எப்ப முடியறது?'' தலேமைப் பண்ணேயாள்,—கண்ணுயிரம் — ஆண்டை வருவதைப் பார்த்து அவர் காதில் விழும்படியாகத் தான் வேலேவாங்கும் சாமர்த்தியத்தை விளக்கக் கத்தினுன்! அவன் அறிவானு பாவம், பரமானந்தரின் கோபத்தைக் கொட்டும் களிப்பிற்கு, அவன் அதட்டலில் விஷயம் இருந்தது என்பதை?

"எவர்டா அது? எட்டு மணிக்கு வந்தது ஏர்பிடிக்க? எட்டு மணிக்கா வந்தான், எந்தக் கழுதே அது?'' பரமானந்தர், கோபமாகக் கேட்டார். தான் தவறுசெய்து விட்டோம் என்பதை அப்பொழுது தான் உணர்ந்தான், கண்ணுயிரம். ஆண்டே கேட்கிருர். சொல்லாமல் இருக்கலாமா? சொன்னுன்.

அதற்கு, "தருமனு? தடி எருமையல்லவா அவன்? ஏண்டா இப்படித் துரோகம் செய்றீங்க? மாலேயானதும் மணிமணியாக்கூலியைக் கொட்டிக்கிறீங்க... காலேயிலே மணியாகி வந்து கண்ணிலே மண்ணேத்தூவப்பார்க்குறீங்க......'' என்று கூறிப் பரமானந்தர் கோபமாகக் குதிக்கும் அளவிற்கு வந்து விட்டார்.

"அசந்து தூங்கிவிட்டேன் ஆண்டே, என்னக்கியும் இல்லாமல் இன்னக்கி.........'' தருமன் இதைத்தான் சொன்னுன். பரமானந்தர் பாய்ந்தார். "தூக்கம் என்னடா தூக்கம் உனக்கு எட்டு மணி வரைக்கும்! சூரியன கிளம்பின பிறகும் சொரணே யில்லேயாடா உன் தோலுக்கு? ....''

தருமன் தலேயைக் கவிழ்த்துக்கொண்டே ஏரை நடத்தினுன். என்றும் அவன் இப்படித் திட்டு வாங்கியதில்லே. தருமன், என்ருலே, 'மானஸ்தன், ஒரு கெட்ட பேச்சுப் பொறுக்க மாட்டான்...' என்று பெயர் வாங்கியவன். ஆண்டை திட்டுகிருர். தேள் கொட்டுகிறது!

அதை அடிக்க அவனுக்குக் கையேது? அவன் 'அசந்து' தூங்கி விட்டான். ஆமாம்! அப் படித்தான் சொல்லலாம் அவ ரிடம் வேறு எப்படிச் சொல் வது? அவன் மனம், அன்று கருக்கலில் குடிசையில் நடந்த நிகழ்ச்சியைக் கிளறிக்கொண்டி ருந்தது!

ஃ ஃ ஃ

"செல்லம்! சேவல் கூவி டுச்சே... செவிடா உனக்கு? நான்போக வேண்டாமா, வேலைக்கு? போயிட்டு வரட் டுமா கண்ணு......"

"சரிதான் மச்சான்! வேலே! வேலே! வேலே!...... காலமெல் லாம் வேலேதான்...... இன்னும் கொஞ்சம் விடிஞ்சுபோனு என்னவாம்?......"

புரட்சிக் கவிஞரின் 'இசை யமுது' இசைக்கப்பட்டது, குடிசையில். யாழில் அல்ல, குழலில் அல்ல — செயலில்! குழைந்த குரலில்!

"சேவல் குரல்கிழியக் கூவல்
கேளடி கரும்பு!—நின்
ஆவல் தெரியுமடி போக
விடைகொடு! திரும்பு!"


தான் படிக்காத இந்தப் பாட்டையே, தருமன் தன் மனைவி செல்லத்திடம், இப் படியே அல்ல, சில வார்த்தை மாற்றங்களுடன், கொஞ்சு தலில் குழைந்த கொச்சைத் தமி ழில் பாடவில்லை; பேசினுன், வெற்றி பெற்ருனு வேண்டு கோளில்? அவன் வாயைப் பூட்டிவிட்டாள் செல்லம்; தன் செவ்விதழ்களால்! திறந்திருந் தால் தானே வாய் பேசிக் கொண்டிருக்கும்!! விடை கேட் டுக் கெஞ்சிக் கொண்டிருக் கும்?...... 'சுள்ளென்று' உட லில் சூரியன் குத்தியபோது தான், துள்ளியெழுந்து செல் லம் தருமனை இப்படியும் அப் படியும் ஆட்டி எழுப்பிவிட் டாள். அலறி அடித்துக் கொண்டு வயலுக்கு ஓடிவந் தான்......!

ஃ ஃ ஃ

தருமன், ஏரை நடத்திக் கொண்டே, கழிந்துபோன, இந்த நிகழ்ச்சியில் கருத்தை இருத்திக் கொண்டிருந்தான். 'ஆண்டை' கத்திக்கொண்டிருந் தார். தருமனின், கண்ணின் ஓரங்கள் ஈரமாயின!

.........பரமானந்தர் அங்கி ருந்து திரும்பும் போது தழ தழத்த குரலில், கண்ணுயிரம் ஏதோ சொன்னுன். பரமானந் தர் கேட்டார்.

"என்னடா...என்ன நீ முணு முணுக்கிறே..."



சாப்பிட வந்தவர்: என்ன சப்ளே யர், ஆரஞ்சுகிரஸைக் காப்பிமாதிரி ஆற்றுகிறீர்?

சப்ளையர்: மறதி சார்; நான் இந்த ஸ்டாலுக்கு வருமுன்பு காப் பிக் கிளப்பில் இருந்தேன், அந்தப் பழக்கம்.

"அதாங்க!..."

"அதான்னு——என்னடா?"

"அஞ்சு நாளா வீட்டுக்கு வந்து அலைஞ்சுக்கிட்டு இருக்கேனுங்க ஆண்டே——"

"எதுக்குடா—— சொல்லித் தொலை——"

"ஒரு ரூ—பா—பணம்——"

"பணந்தானடா—மாலையிலே வாபோ——வேலை முடிஞ்சதும்! வாங்கிக்கிட்டுப் போகலாம்... போடா! போய் வேலையைப் பாரு. எல்லாம் அலங்கோலமா நடக்குதுபோ— நல்லாக் கவனி ——காலந் தாழத்துப் போச்சுடா எல்லா வேலையும் இந்த வருஷம்—— அதட்டி வேலை வாங்கு—— அதோட நீயும் வேலை செய்யாம நிக்காதே—— நீயும் செய். போ——"

பரமானந்தர் போய்விட்டார், கார்வாரியுடன்!

"மாலையிலே வா. போ—— வேலை முடிஞ்சதும வாங்கிக்கிட்டுப் போகலாம— பணம்——" இந்த வார்த்தைகள் மட்டுந் தான் கண்ணாயிரத்தின் காதில் விழுந்தன! அதற்கப்புறம் ஆண்டே என்ன சொன்னார்? அவன் அறியான்! ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி அப்படியே நின்றுவிட்டான்!

"விடுவிடு என்று குடிசைக்குப் போக வேண்டியது— தலையிலிருக்கும் மூட்டையை 'தொப்பென்று' கீழே வைக்க வேண்டியது. மருதாயி மலைச்சு நிற்பாள். அலட்சியமாக அவளைப் பார்த்துக் கொண்டே, பின்புறமாகத் திரும்பிக் கொண்டு—— மூட்டையில், தனியா மீன் இருக்கு— அரிசி இருக்கு, மிளகாச்சாமான் இருக்கு, குழந்தைக்குப் பொறி உருண்டை இருக்கு—— மலைக்காதே! மளமளன்னு வேலையைப் பாரு!—— ஊரிலேருந்து வந்திருக்கிற அக்காவும் மாமாவும வெளியிலேருந்து வந்ததும் நான் குளிக்கப் போயிருக்கிறதாச் சொல்லு—— ஆச்சரியப்பட்டு நிக்காதே போ— ஆக வேண்டியதைப் பாரு——" என்று சொல்லி விட்டுக் குளிக்கப்போக வேண்டியது!"

கண்ணாயிரத்தின் சிந்தனை ஓடிக்கொண்டிருந்தது!

"ஊரிலேருந்து வந்தவங்களுக்கு ஒரு நாளாவது நல்ல கொழம்பு வைச்சுச் சோறு போட வேண்டாமா—நாளைக்கு ஊருக்குப் போகப் போறாங்க— இப்படி மருதாயி என்னை அரிச்சிக்கிட்டு இருந்தாள்... இன்னகி மாலையிலே மலைச்சு நிற்பாள்——"

கண்ணாயிரம், இன்ப எண்ணங்களில் மிதந்தான். மாலை— மாலை! அது வரும் வேளையை எண்ணி எண்ணி மகிழ்ந்தான். "ஒருவேளை 'ஆண்டே' இல்லையென்று சொல்லிவிடுவாரோ? செச்சே! அவர் எப்போதும், சொன்னாச் சொன்னது தான். உண்டுண்ணா உண்டு. இல்லேன்னா இல்லை. தரேன்னு சொல்லிவிட்டு, பிறகு என் தாராமப் போகனும்——நிச்சயம தருவார்—— இன்னக்கிப் பொழுதே மெதுவால்ல போவுது!" கண்ணாயிரம் காலத்தைக் கடிந்து கொண்டான். மாலை பிறந்தது!

கண்ணாயிரம், ஆண்டையின் பங்களா வாசற்படியின் வெளியே நின்று கொண்டிருந்

தான். 'ஷெட்டி'லிருந்து கார் வெளியே வந்து நின்றது. கண்ணுயிரத்தின் மனம் 'பட்பட்' என்று வேகமாக அடித்துக் கொண்டது! பரமானந்தர், அலங்கார புருஷராய்ச் சிரித்துக்கொண்டே வெளியே வந்தார். அவர் மார்பில் தன் பேரனை அணைத்துக் கொண்டிருந்தார்; கொஞ்சிக்கொண்டிருந்தார். அவர் மகளும் மனைவியும் பக்கத்தில் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் பார்வை பரமானந்தரின் மார்பில் இணைக்கப்பட்டிருந்த குழந்தையின் மீது இருந்தது. குழந்தை அவர் 'தலையைக்' கலைத்துக் கொண்டிருந்தது! பக்கத்தில் வந்து கொண்டிருந்த பெரியவருடன் அவர் பேசிக்கொண்டே வந்தார்! ''வீட்டிலே எல்லாம் சினிமாப் போகணும்னு பிடிவாதம் பிடிக்குது. முந்தாநாள் ராத்ரிதான் நாடகம் சினிமாவுக்குப் போச்சு. நேத்து ராத்ரி பாட்டுக்கச்சேரி நடனக் கச்சேரி பார்த்தாச்சு; இன்னக்கி ராத்ரி சினிமா போகணுமாம் - தினம் ஒரு சினிமாப் புதிசா வருது. தினமும் தான் போகமுடியுமா? வாரத்திலே அஞ்சு நாள் ராத்ரியிலே சினிமா டிராமா தான்———'' இப்படிச் சொல்லிக்கொண்டே காரின் அருகில் பரமானந்தர் வந்தார். கண்ணுயிரத்தின் மீது அவர் பார்வை விழுந்தது. கண்ணுயிரம் ஆண்டைக்குத் தண்டனிட்டான். ''போடா! போ! நாளைக்கு வா—நாளைக்கு வாங்கிக்கலாம் பணம்—'' பரமானந்தர் சொன்னார். கண்ணுயிரம் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து கொண்டிருந்த காரைப் பார்த்துக் கொண்டே மரமானான் ●

பார்க்கமுடியாத மனிதர்கள்

○

நாம் நல்ல சௌகர்ய ஸ்திதிகளில் வாழ்வது பற்றியோ' நல்ல அறுவடையைப் பற்றியோ, வெற்றிகரமான காதல் விவகாரத்தைப் பற்றியோ, பெரிய பணக்காரராகிவிட வேண்டுமென்பது பற்றியோ, அல்லது போலீஸ் இலாகாவின் தலைமை அதிகாரி பதவி கிடைப்பது பற்றியோ, இன்பக்கனவு காண்பதிலேயே நாம் பழக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் மேலும், மேலும் அறிவு வளர்ந்து புத்திசாலிகளாக வாழவேண்டும் என்ற நம்பிக்கையில் வாழும் மக்களை நான் பார்த்ததே இல்லை.

ஃ ஃ ஃ

நாம் சாகவேண்டும் என்று வாழ்வதில் அவ்வளவு இன்பம் இல்லை. ஆனால் நாம் நம்முடைய குறித்தகால வரையறைக்கு முன்னமேயே இறந்துவிடப் போகிறோம் என்று தெரிந்து கொண்டே வாழ்வது சர்வ முட்டாள் தனம்.

ஃ ஃ ஃ

மனிதன் உயிர் வாழ்வதற்காகச் செய்யும் போராட்டங்கள் அவனுடைய வாழ்வில் இன்பத்தைத் துடைத்து எறிந்துவிட்டு அவனைத் துயரத்தில் ஆழ்த்துகின்றன. இதைக் காட்டிலும் கலா ரசனை இல்லாத, களிப்பூட்டும் விஷயம்வேறு ஒன்றுமில்லை

— ''செகாவ்''

ஒரு ரூபாய்க்கு ஆறு படம்

சுகீ





மனிதனுக்குத் தன் அழகைப் பார்த்துக்கொள்வதில் அவ்வளவு ஆசை கிடையாது; இரண்டொருவர் சதா கண்ணாடியில் முகத்தை வழித்தலும் வாருதலுமாக இருப்பார்கள். சட்டைக் காலரைத் தூக்கி விடுவார்கள்; அப்படி மடிப்பார்கள். இப்படிக் கழுத்துப் பட்டிக்குள் காலரை மறைத்துப் பார்ப்பார்கள். வலது தோளில் கிடக்கும் துண்டை இடது தோளில் மாற்றுவார்கள். ஒரு அலசு அலசி மயில் தோகை விரிப்பது போல, விசிறி மடிப்பைக் கலைத்து மாலை போன்றோ, இல்லை துப்பட்டி போர்த்துவது போன்றோ போடுவார்கள். முழுக்கைச் சட்டையைப் பித்தான் போடாமல் முழங்கை வரை மடக்குவதும், பிறகு இழுத்து விட்டுக்கொள்வதும் பொழுது போக்கான செயல்கள்; அழகென நினைத்துச் செய்கிற ஆடம்பரங்கள்.


ஆனால், பெண்கள் அழகு செய்வதை வர்ணிக்க முடியாது. கண்ணாடி போன்ற கன்னத்தோடு மட்டுமல்ல, கண்ணாடியுடனேயே பிறக்கவேண்டியவர்கள்! இடி யிடித்தாலும், ஜோடிக்கும் பெண்ணின் காதில் விழாது. பூகம்பம் வந்தாலும் புடவைக் கடைக்குள் இருப்பவள் அறிய மாட்டாள். ஆண்களை மயக்குவதற்காகப் பெண் அத்தனை பொழுதையும் சாம்பலாக்கவில்லை, சகோதரப் பெண்கள் தன் ஒயிலையும் புடவையையும் கண்டு பொறாமைப் படவே அவர்கள் அத்தனை ஆடம்பரமும் அவகாசமும் எடுத்துக் கொள்கிறார்களா, அல்லது பின் கண்ட காரணங்களுக்காகவா? புருஷன் எடுத்து வர மறுத்ததற்காகவும் இருக்கலாம். அது காஞ்சிபுரம், காசி முதலான இடத்திலிருந்து வந்ததற்காகவும் இருக்கலாம் எல்லோரும் அணிகிறார்கள் என்றும் இருக்கலாம், யாருமே அணியவில்லை என்பதே காரணமாக இருக்கலாம். அதனால், தன்னழகு அதிகமாவதாக எண்ணலாம்.

இந்த இரண்டு பேர்களுக்கும் பொதுவான பைத்தியம் போட்டோ பிடித்து, வீட்டிலே அலங்காரமாக மாட்டிக் கொள்வது. இதை வைதிக மனப்

பான்மை உள்ளவர்கள் அனுமதிக்கமாட்டார்கள்.

படத்திலாவது மன ஒற்றுமையோடு நெருங்கி உட்கார்ந்து கொள்கிறது என்ற மனப்பான்மையுடன் முதல் படம் பிடிக்கிறார்கள், தம்பதிகள்! ஆண்டுகள் இரண்டொன்று சென்றதும் இவள் நிழலை விட்டு அவன் ஓடுவதும், அவன் மூச்சை இவள் சுவாசிக்க மறுப்பதும் இயல்பு. மணக்கோலத்தோடு படம் பிடித்துக்கொள்வது, அந்த ஆனந்தமயமான பொன்போன்ற பொழுதைப் படத்தைப் பார்க்கிறபோதெல்லாம் நினைவில் எழுப்பும். இந்த மாதிரி காலைப் பருவ அழகையும், கலியாணக் கோலத்தையும் எண்ணிப பார்க்கும் சந்தர்ப்பத்திற்காகவாவது, தம்பதிகள் படம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

தெரு வீதியில் போய்க் கொண்டிருந்தபோது மேற்படி சிந்தனைகள் எழுந்தன. ரூபாய்க்கு ஆறு போட்டோ எடுத்துத் தரப்படும் என்று விளம்பரம் செய்திருந்தார்கள். சாக்ஷாத் ஆறுமுகத்தை எடுக்க என்ன கேட்பார்களோ——! ஆறு வகையாக —— ஒரு முகத்தோடு — தன்னைப்படம் பிடித்துக் கொள்வதில் குழுமி நின்றார்கள். சுயரூபத்தையும், அன்றாட உடைகளையும் மாற்றித் தன்னை வேறு உடையால் படம் பிடிப்பதில் எத்தனை மகிழ்ச்சி.



மீசையே இல்லாதவர் ஆட்டுக் கொம்புபோல மீசையைத் திருகிவிட்டார். கோணல் இல்லாமல் சிரித்த முகமுடையார் கம்பீரமாகக் கோபக் கனல் தெறிக்க உருட்டி விழித்தார். கோபக் கனல் தெறிக்கும் விழியுடையார்— நாணிக் கோணிப் பெண்மையின் உருவமாய்ச் சமைந்தார். சூட்டு கோட்டு அணிந்தவர், கிராமத்தானைப் போல முண்டாசும், தூக்கிக் கட்டிய வேட்டியுமாய்க் குலைந்த தலையுடன் ஒரு தடிக்கம்புடன் நிற்கிறார். கிராமவாசியோ புதிய சட்டைக்குள் புகுந்து 'ராஜ முழி' விழிக்கிறான்.

பிறர் தொழில் துறைகளில் வேஷமிட்டுக் கொள்வதில் நடிகர்கள் பாக்கியம்செய்தவர்கள். இரண்டாம் வகுப்பை எட்டிப் பார்க்காத நடிகன் ஐக்கோர்ட்டு நீதிபதியாக அமரும் பாக்கியம் (மேடையில்) கிட்டும். நடிகர்கள் அல்லாதவர்களுக்கு ஜட்ஜைப் போல, வக்கீல்போல, போலீஸ் இன்ஸ்பெக்டர்போல, கான்ஸ்டெபிள்போல வேஷமிட்டுப் படம் பிடித்துக் கொள்வதில் எல்லையற்ற ஆனந்தம்.

இப்படிக் கூடுவிட்டுக் கூடு பாய்வதில் இந்தத் திருமூலர்கள் எத்தனை அவஸ்தைகளையும் படத் தயாராக இருக்கிறார்கள். மாட்டுக்காரன் சடலத்துள் திருமூலர் புகுந்தாரோ என்னவோ, என் கண் முன்னே காதிலே லோலாக்கும், உடம்பிலே வாயில் சேலையும் அணிந்த கட்டுமஸ்



தான பயில்வான் நிற்கிறார். இப்படி ஒரு பெண்மணி பூமியில் பிறந்திருக்க முடியாது? அவருக்கோ தம்மைப் பெண்பாலாகப் படம் பிடித்துக் கொள்வதில் ஆனந்தம். அந்தப் பெண்ணுடையில் ஆறு கோணல்களில் பாவம் பிடித்தார்.

நாயகனுக்காக ஏங்கி நிற்பதாக ஒரு பாவனை. அந்தச் சாயலைக் கண்டு எல்லோரும் சிரித்தோம். அவர் தமது வேஷத்தைமறந்து புடவையை வரிந்து கட்டிகொண்டு அடிக்க வந்துவிட்டார். ஆனால் அவர் போலீஸ் உத்யோகஸ்தர் போலப் படம் பிடிக்க ஆசைப்பட்டால், பலரும் போற்றுவார்கள். ஆனால் போலீஸ் உடையுடன் விரைப்பாக நிற்கிற ஆசாமிக்கு வயிறு எது முதுகு எது என்று சொல்ல முடியாது; அப்படிப் பட்ட ஒட்டெலி. இந்த ரூபத்தோடு முறுக்காகவும் கம்பீரமாகவும் நின்று, கண்ணில் அதிகாரவெறியையும் காட்டுகிறார்! சிரிப்புத்தான் வந்தது.

பார்க்கப் பார்க்க எல்லாம் வேடிக்கையாக இருந்தன. குழந்தைகள் கற்பனை உலகத்தில் திண்ணையில் இருந்தபடியே தங்களை அப்பா அம்மாவாக ராஜா ராணியாக நினைத்துக் கொள்ளுகிறார்கள். வெறும் சட்டிபானைகளில், பொங்கலும் புளியோதரையும் வடித்து விருந்து நடத்தி விடுகிறார்கள். அந்தக்குழந்தைப் புத்திதான் இவர்கள் மனத்திலும், இந்த இடத்தில் விளையாடுகிறது.

குமாஸ்தாக்களாக, மானேஜர்களாக, கடை வேலைக்காரனாக, டாக்டராக இருக்கிறவர்கள் தத்தம் வேலைகளை உத்தியோக உடைகளைமறந்து வேறு பாத்திரங்களாக மாறுவதில் சிறிதளவு இன்பமடைகிறார்கள். இந்த மனமாற்றத்தைக் கணப்பொழுதில் உடை மூலம் மாற்றி, தங்களைப் படமெடுத்துக் கொண்டு ஆனந்தப் படுகிறார்கள். இதிலே, ஆண்களுக்குத் தான் ஆசை அதிகமாக இருக்கின்றது. பெண்கள் உடை மாற்றிக் கொண்டு ஆயிரம் படம் எடுககச் சம்மதிப்பார்களே தவிர வேஷம் மாற்றிக்கொண்டு படமெடுக்கச் சம்மதிக்கமாட்டார்கள்.

என் நண்பன், டிக்கட் பரிசோதகன், யாரிடமோ இரவலாகப் பாம்புக்கூடை, பழைய



கம்பளி மகுடி முதலான உப
கரணங்கள் வாங்கிக் கொண்டு
வந்துவிட்டான். அத்தோடு
பாம்பையும் வாங்கிவந்து
அவன் மகுடி வாசிக்கும்போது
பாம்பின் படத்தருகாகச் சேர்த்
துத் தன்னைப் படம் எடுக்க
வேண்டுமெனக் கேட்டுக்
கொண்டான். பாம்பு பட
மெடுத்துவிட்டால் என்ன
செய்வதெனப் போட்டாக்காரர்
சீறினார். அவர் சீறச் சீற டிக்
கெட் பரிசோதக நண்பன்
பெட்டிப்பாம்பாக அடங்கிவிட்
டான். பாம்பாட்டியே அங்கு
வந்திருந்ததால் காரியம் கை
கூடிற்று. தனக்கு அந்த
வேஷப் பொருள்கள் கொடுத்
துதவியதற்காக, டிக்கட் பரி
சோதகன் தமது செலவில் ஒரு
படம் எடுத்துக்கொள்ளும்படி
பாம்பாட்டியை வேண்டினான்.
பாம்பாட்டி, அவருடைய தூய
வெள்ளைக்கால்சட்டை, கோட்டு
டை, பூட்சு போட்டுக் கையிலே
புத்தகம், பென்சில் சகிதம்
நின்ற கோரக் காட்சி—
அடாடா—சோளக்கொல்லை
பொம்மை கெட்டது கேடு.

சிரிப்புக்கு மட்டுமல்ல; சிந்
தனைக்கும் சில வேஷங்கள்
விருந்தாக இருந்தன. ஆளு





டைய ரூபமே மாறி அடையா
ளம் கண்டு கொள்ள முடியா
மல் மாற்றிக் கொள்ளும்
திறமை உள்ளவர்கள் சிலர்
வந்தார்கள். டாக்டராக மாறி
ரப்பர் மாலையைக் கையில்
பிடித்தபடியே காமிரா முன்
னால் வந்த சமயம், என் உடம்
பைப் பரிசோதிக்கச் சொல்லா
லாமா என எண்ணினேன்.
தத்ரூபம் டாக்டர் கெட்டார்
போங்கள். இன்னொருவர் வக்
கீல் சட்டை நாலுகையுடன்,
ஜரிகை குல்லாயுடன் நிமிர்ந்து
நின்றபோது, அவர் துணை
யினால், யாரையாவது கொலை
செய்து வரலாம் என்ற நம்
பிக்கை கூடப் பிறந்தது.
அதே வக்கீல் வேஷக்காரர்
பத்து நிமிஷத்தில் திருடனாக
வேஷம் மாறியதும் என் பணப்
பையைக் கவனித்துக் கொண்
டேன்.

பலர் பல வேஷங்களில்
மாறுவதைக் கண்டதும் இந்த
மனிதர்கள் மகிழ்ச்சியை அனு
பவிக்க இவ்வழிகளில்பிரவேசிப்
பதன் நோக்கம் என்ன?
இவ்வெண்ணத்தை என் மனம்
படம் பிடிக்க ஆரம்பித்தது.
மனித மனத்தின் எண்ணங்
கள் தூக்கத்தில் கனவாக
வந்து இன்பம் தருவது போல



மனமாற்றங்களை விரும்பும் போது சுயஉருவில் கை கூடா விட்டாலும் பட ரூபத்தில் வந்து மகிழ்விக்கின்றன. தன்னை வேறு கோணத்தில் பார்ப்பதில் மனிதனுக்கு எப்போதும் ஆசை. இந்த ஆசைகளில் ரூபாய்க்கு ஆறுபடம் எடுப்பதும் ஒன்று.

இலக்கியத் தொடர்பின் மூலமாகப் பாத்திரங்களின் இன்பதுன்பங்களை நம் இதயம் அனுபவிக்கிறது; நாடக பாத்திரங்களின் துன்பத்திலும் இன்பத்திலும் நாமும் பங்கு கொள்கிறோம். அதே போல மாறு வேஷம் போட்டுக் கொண்டு சுய ரூபத்தில் அதைப் பார்க்கிறதில் தனக்குத்தானே திருப்தி, இந்தப் பொழுது போக்குத் தொழிலாக மாறிவிட்டால், அது தான் நடிப்பு! நடிகர்களாக மாற இயலாத, முடியாத, இச்சைப்படாதவர்கள் எல்லாரும் ரூபாய்க்கு ஆறு விதமாகத் தங்களைப் படம் பிடிக்க இங்கு கூடுகிறார்கள்.

இங்கென்ன? நகரங்களில் ஆங்காங்கே இப்படி வேஷ மாற்றும்படி அறை கூவி அழைக்கும் ஸ்டுடியோக்கள் பல இருக்கின்றன. வேஷ உடைகளைப்புகைப்பட நிலையத்தார்களே உதவி விடுகிறார்கள், வேஷம் போட்டுக்கொள்ளவும் உதவி செய்கிறார்கள். இந்தக் கூத்துக்களில் என் மனம் லயித்துக் கூடுவிட்டுக் கூடுபாய எண்ணிற்று.

ஆறென்ன? ஆயிரம் பதினாயிரம் பாத்திரங்களின் மனதில் பாய்ந்து வெளிவருவதல்லவா, கஷ்டம்? போட்டோக்காரன் இருப்பதை மட்டுந்தானே பிடிக்கிறான். இலக்கியஆசிரியன் இருக்க வேண்டியது, இல்லாதது, இருக்க முடியாதது எல்லாவற்றையும் எத்தனையோவகைகளில் படம் பிடிக்கிறானே—— அந்த உலகம் தனி.

அதனால்தான் என்போன்ற மனம் உடையவர்கள் ஆறு விதமல்ல; ஐயாயிரம் விதங்களில் உடம்புமாற ஆசைவைப்பது கிடையாது. ஆனால் உள்ளம் மாறுவதில்ரொம்ப ஆசை உள்ளவர்கள்.

இந்தப் பெருமித எண்ணத்தோடு "வேஷதாரிகள்" கும்பலை விட்டு தெருவில் நடக்க ஆரம்பித்தேன்.

பாரதிதாசன் பரம்பரை

போதுமாமோ?


வண்டினங்கள் துளைசெய்த வரண்ட மூங்கில்
வழியோடி இசைபரப்பும் காற்று! பெண்டிர்
தண்டைஒலி செய்தோடும் அருவி! எங்கும்
தன் சுருதி கேட்குமாறு வண்டொ லிக்க
அண்டையிலே மலர்சிரிக்க ஆடு கின்ற
அழகு மயில் போன்றருகே வந்து நின்றாள்;
கண்டிருந்தேன் அவளழகை! கவிதை ஊட்டும்
கன்னத்திற் கிருமுத்தம் போது மாமோ?

வெங்கதிராய்ப் பனியொழிக்கும்; வெப்பம் நீக்க
விண்ணிலவாய்த் தவழ்ந்திலங்கும் அன்னாள் மேனி!
பொங்குகின்ற என்னுள்ளப் போக்க றிந்து
பூரிக்கும் மெய்யின்பக் கொப்ப ளங்கள்!
மங்காத வாழ்விற்கோர் மலர்ச் சிரிப்பு!
மதுவின்றி மருள்நோக்கால் மயக்க மூட்டி
எங்குமிலாப் புதுமையினைக் காட்டு கின்ற
எழில்முகத்திற் கிருமுத்தம் போது மாமோ?


சிரித்திருக்கும் இளமையினைத் தெரியக் காட்டும்
சிற்றிடையாள் வளையொலியின் பொருள்தான் என்ன?
விரித்திதழை—பல்லொளியை விளங்கக் காட்டி
விழிதாழ்த்தி எனைவிழுங்க எங்கு கற்றாள்?
பிரித்தற்கிங் கிடமில்லை என்று பேசும்
பெயராத அணைப்புடையாள் கண்ணி ரண்டும்
கருத்தோடு கவிழ்ந்துநிலம் நோக்கு தல்தான்
கன்னத்திற் கிருமுத்தம் போதும் என்றா?

தோழர் சி. திருநாவுக்கரசு அவர்களின்
இக்கவிதை நல்ல தமிழில் இயன்றுள்ளது.
அவர் சேலத்தைச் சேர்ந்தவர்.

—ஆசிரியர்.



பாஞ்சாலி



- நா. முத்து -

"அடி சண்டாளி! அருந்ததி, சாவித்திரி, சீதை பிறந்த நாட்டிலே நீ வந்து பிறந்திருக்கிறாயடி, என் மானத்தை வாங்க. ஏண்டி அழுகிறாய்? பத்தினி யென்றால் திரௌபதையம்மன் கோவிலிலே தீயிறங்குவாயாடி"— தீப்பறக் கப் பேசினார், அர்ச்சுனன், தன் மனைவி பாஞ்சாலியிடம்.

"எப்படி மனந்துணிந்து தீ மிதிப்பது?" என்று கலங்கினாள் பாஞ்சாலி.

ஃ ஃ ஃ

பாஞ்சாலி அர்ச்சுனனின் மூன்றாவது மனைவி. கட்டழகு வாய்ந்த மங்கை - வாலிபப் பருவம் கடந்த காலத்திலே அர்ச்சுனன இவளைக் கல்யாணம் செய்து கொண்டதைக்கண்ட ஊரார், "அவர் 'சுமங்கலி'யாகச் சாவதற்காகப் புதுக்கல்யாணம் செய்திருக்கிறார்" என்று கேலிசெய்தனர். "பெண்கள் தான் புருஷன் இருக்கும் போதே பூவோடு மஞ்சளோடு போக வேண்டுமென்று விரும்புவாங்க. இது என் பெண்டாட்டி இருக்கும்போதே சாவவிரும்புது?" என்று வம்பளந்தனர். இது பாஞ்சாலி காதிலும் விழும். அவள் உலையில் பானையை வைக்கும் போதெல்லாம் 'உலைவாயை மூடலாம், ஊர்வாயை மூடமுடியாது' என்று கூறிக்கொள்வாள். அர்ச்சுனனோ தன்னுடைய சொத்துக்கு வாரிசாகவும், தன் கடைசிகாலத்துக்கு உற்ற துணையாகவும் இருக்கட்டு மென்றுதான் பாஞ்சாலியை மணந்தார். அவள் மனம் நோகாமல், வியாபாரத் தொல்லைகளைக்கூட மறந்து இல்லறம் நடத்தி வந்தார். பாஞ்சாலியும், தான் இளமையில் கட்டிய இன்பக் கற்பனைக் கோட்டை வறுமையால் இடித்து வீழ்த்தப்பட்டதால் "எல்லாம் என் தலைவிதி, கல்லானாலும் கணவன், புல்லானாலும்

புருஷன் "என்று நினைத்துப் பதிவிரதையாக இருக்க முடிவு கட்டினாள். "ஏதோ தங்கள் வறுமைக்காக மகளைக் கிழவனுக்குக் கொடுத்தாலும், மகிழ்ச்சியோடு வாழ்கிறார்களே அதுவே போதும்" என்று கடனைத்தீர்க்கப் பணம் பெற்றுக் கொண்டு 'கன்னிகாதானம்' செய்த பெற்றோர் மகிழ்ந்தனர்.

இணைபிரியாமல் வாழ்ந்த அந்த 'ஜோடி, ஒருவாரம் பிரிய நேர்ந்தது. தவிர்க்கமுடியாத காரணத்தால் வெளியூர் சென்று விட்டார் அர்ச்சுனன்.

அந்தஊரில் திரௌபதியம்மன் திருவிழா விசேஷமானது. அதற்காக இரவுநேரத்தில் பாரதம் படிக்கப்பட்டது. ஏராளமான பெண்களும் ஆண்களும் கூடியிருந்து கேட்டுவந்தனர். தனியாக வீட்டிலிருக்கும் பாஞ்சாலியைப் 'புண்ணிய கதை' கேட்கப் பக்கத்து வீட்டுப் பெண்கள் அழைத்துச் சென்றனர். இரண்டு நாளாகச் சென்றுவந்தாள்.

அன்று, "அர்ச்சுனன் திரௌபதியை மணந்து, அழைத்துவந்து, மறைத்து வைத்து ஒரு கனி கொண்டு வந்திருப்பதாகத் தாயிடம் சொல்ல, அந்தக் கனியை அண்ணன் தம்பி ஐவரும் சமமாகச் சாப்பிடச் சொன்னாள் தாய்; அவள் சொன்னபடியே, தாய் சொல்லைத் தட்டாதபடி அக் கனியை ஐவரும் மணந்தனர். அன்று முதல் திரௌபதி ஐவருக்கும் மனைவியாகி அழியாத பத்தினியானாள்" என்று கதை நடந்து கொண்டிருந்தது. அப்போது "பாம்பு, பாம்பு" என்று எவனோ கிளப்பிய கூச்சல் கூட்டத்தில் குழப்பத்தை உண்டாக்கியது. மக்கள் எழுந்து அங்குமிங்கும் ஓடினர். பாஞ்சாலி துணைக்கு வந்தவர்களைப் பிரிந்து விட்டாள். கூட்டத்தால் தள்ளப்பட்டு எங்கோ ஒரு வீதியின் மூலையில் நின்று கொண்டிருந்தாள். தன் வீட்டை விசாரித்துக் கொண்டே நடந்து வந்தாள். அவளுடைய திக்கற்ற நிலையைக் கண்ட ஒருவர் அவளுக்கு வழிகாட்ட முன்வந்தார். பத்தடி தூரத்திலுள்ள இடத்திற்குப் போகப் பத்துப் பர்லாங்கு அழைத்துச் செல்லும் குதிரைவண்டிக்காரன் போல எங்கெங்கோ அழைத்துச் சென்றார். கடைசியில் அவர் இன்பபுரிக்கு வழிகாட்டி விட்டார்! அவள் வழி தவறினாள், நெறிதவறினாள், வழுக்கி விழுந்தாள்.

இது யாருக்கும் தெரியாது என்று அவர்களிருவரும் நினைத்திருந்தனர். ஆனால் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் போலீஸார் கண்டு விட்டனர். அவள் அக் 'கனவானை' விபசாரத்துக்கிழுத்ததாக விபசாரத் தடைச் சட்டப்படி வழக்குத் தொடுக்கப்பட்டது!

ஊர் திரும்பியதும் அர்ச்சுனனுக்கு முதன் முதலில் எட்டியது இச் செய்திதான். அவர் இதை நம்பவில்லை. வீட்டுக்குச் சென்றதும் பாஞ்சாலியை அழைத்துக் கேட்டார். பெண் ஒப்புக்கொள்ளும் விஷயமா இது?

"இல்லைங்க, நாம் இரண்டு பேரும் நல்லாயிருக்கிறது

பொறுக்கவில்லே. இல்லாததையும் பொல்லாததையும் கட்டிவிட்டாங்க..." பாஞ்சாலி சொல்லி முடிப்பதற்குள் கண்ணீர் மழை பொழிந்தது.

"போடி, சாகசமா செய் இருய்?" என்று அவர் வாய் முணுமுணுத்தாலும், மனம் இளகி விட்டது. என்ருலும் தன் சந்தேகம் தீர ஒரு வழி காணத் துடித்தார். பத்தினி சீதையை இப்படித்தான் ஊர் தூற்றியது. ஆனுல் அவள் தீக்குளித்து நிரூபிக்கவில்லேயா என்று படித்த புராணம் எதிரொலித்தது. சோதனையை நிறைவேற்ற நல்ல வாய்ப்பும் இருந்தது. அடுத்த நாள் திரௌபதையம்மன் தீமிதி திருவிழா. அதை உபயோகப் படுத்த முடிவு செய்தார்.

ஃ ஃ ஃ

திரௌபதையம்மன் தீமிதி திருவிழா இவ்வாண்டு மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடாயிற்று. இரண்டு மூன்று இடங்களில் தீ போடப்பட்டது.

பாஞ்சாலியின் மனம் பதறியது. "மனம் வாக்குக் காயங்களால் செய்த குற்றத்தை எப்படி இல்லே யென்று நிரூபிப்பது? அதுவும் தீ மிதிப்பதா? அப்பப்பா! அதற்கு எவ்வளவு ஒழுக்கம், சுத்தம், பக்தி வேண்டும்" என்று எண்ணும் பொழுது அவள் உள்ளம் பதறியது. அவளுக்கு இருந்த ஒரே துணை திரௌபதையம்மன் தான்.

"அம்மா, தாயே! திரௌபதே, நீயும் பெண், நானும்

பொண்ணு. உன்னைப் பத்தினி என்று போற்றுகிறவர்கள் தான் என்னை விபசாரி என்று தூற்றுகிறார்கள். நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும். இந்த அநாதைக்கு வேறு கதியே இல்லை'' அம்மனைத் துதித்தாள். ஆனாலும் துணிவு வரவில்லை. "உயிரோடு இருந்து என்ன பயன்? வாழ்வா, சாவா, என்ற போராட்டம் இது. விப சாரி என்று பிறர் தூற்ற வாழ்வதை விடத் தீயிலே இறங்கி இறந்து விடலாமே! திரௌபதையம்மன் துணையால் தீயிலிருந்து மீண்டால் மீண்டும் வாழலாம்''

துணிச்சலோடு சிரித்துக் கொண்டே, தீயில் இறங்கிச் சென்ற பக்தர்களைப் பின்பற்றினாள். அவள் புன்னகையையும் தீயில் நடப்பதையும் அர்ச்சுனனும் மக்களும் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒருமுறை இருமுறை மூன்று முறையும் தீ மிதித்து விட்டாள். ஆர்வத்தோடு உணர்ச்சி மீறி அவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டார் அர்ச்சுனன்.

ஃ ஃ ஃ

வீட்டின் உட்சுவரில் மாட்டியிருந்த, சீதையருகே வீற்றிருக்கும் ராமர் பட்டாபிஷேக வைபவப்படத்தின் எதிரே நின்றுகொண்டு "ஹே, ராமா, உன் சக்தியே, சக்தி. உன் அருமை தெரியாமல் தீயில் இறங்கிவந்த பத்தினி சீதையைத் தூற்றினார்களே! மடையர்கள்! இன்று போல் என்றும் எங்களைக் காப்பாற்று. ஸ்ரீ ராம ஜெயம்.'' என்று வணங்கினார் அர்ச்சுனன்.

பாஞ்சாலி, அப்படத்தின் பக்கத்தில் மாட்டியிருந்த திரௌபதையம்மன் முன்னால் நின்றுகொண்டு "தாயே, எங்கே கைவிட்டு விடுகிறாயோ என்னவோ என்று பயந்தேன். உன்மகிமையை இன்றுதான் உணர்ந்தேன். நான் உன் அடிமை. நீதான் காப்பாற்றவேண்டும்.'' என்று துதித்து மகிழ்ச்சியடைந்தாள். ஆனால் அவர்கள் மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

சிறிது நேரத்திற் கெல்லாம் வீதியில் பரபரப்பு ஏற்பட்டது. வெளியே சென்று விசாரித்தார் அர்ச்சுனன்.

ஊரில் வேறொரு பகுதியில் போடப்பட்ட தீயில் சில சீர்திருத்தக்காரர்கள் இறங்கினார்கள் என்றும், அவர்களைத் தீ ஒன்றும் செய்யவில்லையென்றும், தீமிதிக்கக்கடவுள் கிருபையோ, பக்தியோ, ஒழுக்கமோ தேவையில்லை, இது சுத்தப் புரட்டு, நெருப்பை நெருக்கமாகப் போட்டுச் சிதறாமல் மிதித்தால் சுடாமலிருப்பது நெருப்பின் விசேஷத்தன்மையாகும் என்றும் எடுத்துக் கூறியதை அவர் கேள்விப்பட்டார்.

அவர் மூளை வேலைசெய்ய ஆரம்பித்தது."பாஞ்சாலிபத்தினியில்லையா? தீ மிதிக்க ஒழுக்கமும், பக்தியும், அவசியம் மில்லையா?'' இக்கேள்வியைக் கேட்டுக் கொண்டேயிருந்தார், தனக்குள்ளே!

பாஞ்சாலி குற்றம் செய்தது நிரூபிக்கப்பட்டு, தண்டித்த நீதிபதியின் தீர்ப்பு அவருடைய கேள்விக்குப் பதிலளித்தது. "பாஞ்சாலி கற்பிழந்தாள்!'' அவர் உதடு தீர்ப்புக் கூறியது.

4

மாலதி

டர்பன் சங்கர குமாரன்

இளஞ் சிறுவன் - பால்வடியும் முகம்! கபடமற்ற தோற்றம்! வயதோ சுமார் பத்து தான் இருக்கும். பயமறியாப் பசுங்கானே!

அவன் முன் இருப்பதோ ஒரு பெரிய கோயில்! அடுத்த வாரம் திருவிழா நடக்கப்போகிறது. அதற்காகக் "கொடியேற்றம்" என்ற ஆரம்பவிழா.

மாலே சுமார் ஏழுமணி இருக்கும். ஏராளமான ஆண்களும், பெண்களுமாகக் கோவிலினுள் குவிகின்றனர். பக்தி பரவசர்களாக ஆடிப்பாடி மகிழ்கின்றனர். ஆனால், ஏனோ அச்சிறுவன் மட்டும் வீதியிலேயே ஓரமாக, நின்றுகொண்டிருந்தான. அவனைக் கவனிப்பாரில்லே.

ஆமாம்! அவன் ஒரு ஒதுக்கப்பட்ட ஜாதியைச் சேர்ந்தவன். கேவலமாக மதிக்கப்படுபவன். சுத்தமாக வந்திருந்தாலும் ஒதுக்கப்படுபவன். நாலு பேரைப்போல் அவன் கோயிலுக்குள் தாராளமாய் நுழைய முடியாது.

மேள வாத்தியங்கள் முழங்குகின்றன. அந்தி வேளே பூஜை மணியின் நாதம் "கணீர்! கணீர்!" என்று ஒலிக்கிறது. "அரஹர! அரஹர! சம்போ மகாதேவா!" என்னும் மங்கள கோஷம் வானேப் பிளக்கிறது.

ஆச்சு! சுவாமி கோவிலேச் சுற்றிவரப் புறப்பட்டாச்சு! பக்தர்கள் பஜனே செய்தவண்ணம் முன்செல்ல, சுவாமி அவர்களேப் பின் தொடர்ந்து செல்கின்றது.

சிறுவனுக்கு ஆனந்தம் பொங்கி வழிந்தது. சரேலென்று முன்பின் யோசியாமல் உள்ளே நுழைந்தான். சுவாமியைச் சுற்றிவலம்வந்து வணங்கினன். பள்ளியில்கற்ற பக்திரஸக் கீர்த்தனேகளேப்பாடஆரமபித்தான்.

'தடால்' என்று சப்தம் கேட்டது. 'திப்பு, திப்பு,' என்று அடிக்கும் சப்தம் கேட்டது. பக்திரசக் கீர்த்தனேகளேக் காணும். பகவத் கைங்கரியத்தைக் காணும்; எல்லாம் ஒரே குழப்பம். இவ்வளவும் ஒரு "பறச்சிறுவன்" நுழைந்ததால் வந்தவினே. ஆங்காங்கு குசுகுசுவென்று பேசலாயினர். பெரியவர்கள் சிலரின் அசட்டுப் பேச்சு ஒருபுறம்; சிலரின் அனுதாபப் பேச்சு ஒருபுறம்; ஆனல், இவ்வளவிற்கும் காரணமான 'அப்பறச்சிறுவன்' மறைந்தான். அவன் ஓடிப்போய் விட்டானே, அன்றி எங்கேனும் அடைத்து வைத்திருக்கின்றனரோ, ஒன்றும் தெரியவில்லே.

ஃ ஃ ஃ

ஒருமணி நேரம் கழிந்தது. சங்கரதேவர் குமாரத்தி மாலதியைக்காணும்என்றுபெண்கள் கூட்டத்தில் ஒரு கலாட்டா. சங்கரதேவருக்கு இச்செய்தி தூக்கி வாரிப்போட்டது.

ஊரிலே திருட்டுப்பயம் அதிகம். அடிக்கடி குழந்தைகள் காணமற் போவதும், பின் அக்குழந்தையின் நகைகள் எல்லாம் பறிக்கப்படுவதும் வழக்கம். இந்நிலேயில்- குழந்தைகள்

மீது நகைகள் போடுவதற்கே பயந்து கொண்டிருந்தனர் ஊரார்.

மாலதிக்கு ஏழு வயதுகூட இருக்காது. விலையுயர்ந்த நகைகளைப்பூட்டி அலங்காரமாகக் கோவிலுக்கு அழைத்து வந்திருந்தனர். மாலதியைக்காணோம் என்று கூறவும், மாலதியின் பாட்டி, வாயிலும் வயிற்றிலுமாக அடித்துக்கொண்டு மூர்ச்சை போடும் நிலையிலிருந்தாள். சங்கரதேவர் கவலையோடிருந்தார்.

இரண்டு மணி நேரத்துக்குப் பின் மாலதி திடீரென்று எங்கிருந்தோ "அப்பா!" எனக் கூவியவாறு ஓடிவந்தாள். தேவருக்கு ஆனந்தம் பொறுக்க முடியவில்லை. "ஆ! கண்ணே! எங்குசென்றாயம்மா? யாரேனும் துன்புறுத்தினரா?" என மிக வாஞ்சையுடன் வினவினர், அச்சிறுமி சொன்னாள்:-

"அப்பா! நேற்றிரவு கோவிலிலே ஒரு பையனை அடி அடின்னு அடிச்சாங்கள் அல்லவா? எனக்கு ரொம்பப்பயமாயிருந்தது. பாவம்! அடி பொறுக்காமே கத்தினான்.

"நான் அப்புறம் அந்தப் பையன் கிட்டப்போய் பார்த்து, 'ஏன் உன்னை அடிச்சாங்கோ?' என்று கேட்டேன். அவன் சும்மா, சும்மா அழுதான். அப்புறம் அவன் பறையனும், கோவிலுக்குள் வந்ததுக்காக அடிச்சாங்கோன்னு சொன்னான். பாவம்னு அவன்கூடவே இருந்தேன். இப்பொ அவனுக்கு ஒடம்புக்குத் தேவலை. நான் கூப்பிட்டேன்; வரமாட்டேன்னு அங்கியேஇருக்கிறான். இங்கேவந்தா நீங்கள் எல்லாம் அவனை அடிப்பீங்களாம்; ஏனப்பா! அவனை அடிக்கணும்? அவன் ரொம்ப நல்லவனாட்டம் இருக்கானே?"—என்று இரண்டு கேள்விகளுடன் தன் கதையைக் கூறிமுடித்தாள். இந்த வரலாறு அங்கு கூடியிருந்த அனைவரது மனதையும் குழப்பிவிட்டது.

"சரி போ அம்மா. இனி உனக்கு அவனைப்பற்றி கவலை வேண்டாம்" என்று மாலதியைச் சற்று கடிந்தார் சங்கரதேவர். 'ஓ" வெனக் கதறியழுதவாறு உள்ளே சென்று படுக்கையில் வீழ்ந்தாள்மாலதி. சங்கரதேவர் காரணம் தெரியாமல் பின் தொடர்ந்தார்.

உலகில் ஒரு புறம் மகிழ்ச்சி காணினும், மற்றொரு புறம் துக்கமும் காணப்படுகின்றது. சங்கர தேவரது குமாரத்திக்கு இப்போது காய்ச்சல். அது இன்னும் தணியவில்லை. இரண்டு டாக்டர்கள் அருகிலேயே இருந்தனர். பாவம்! ஒரு நாள் முழுதும் ஆகாரமில்லை! காய்ச்சலோ வெகு கடுமை! படுத்தவள் இன்னும் கண் திறந்து பார்க்கவில்லை! மாலதி "ஓ"வெனக் கதறியது ஏனென்றும் தோன்றவில்லை............ ஒருவேளை எதையேனும் பார்த்துப் பயந்து கொண்டிருப்பாளோ?......... இதுதான் அவர்கள் செய்த முடிவு. டாக்டர் பரீட்சை பெற்றவர்களும் காரணத்தைப் பற்றி ஆலோசிக்கவில்லை. அவளின் அப்போதைய மனோநிலையை அறிந்து கொள்ள முயற்சிக்கவில்லை.

மாலதியின் பாட்டி தூங்கி விழுந்தபடியே கட்டிலின் அருகில் உட்கார்ந்திருந்தாள். அவளின் தாயாரோ சமையல்

வேலையைக்கவனிக்கவும்முடியாமல் பரிதாபகரமான மகளின் காட்சியையும் காணச் சகியாமல் மனோ வேதனையால் தத்தளித்தாள். சங்கரதேவர் ஒன்றும் தோன்றாதவராய் அறையில் உலாவிக்கொண்டிருந்தார்.

இந்நிலையில் மாலதி ஏழுமணி சுமாருக்குக் கண்ணை விழித்தாள். உடனே சுற்றுமுற்றும் பார்த்தாள். அவள் யாரையோ தேடுபவள் போல் காணப்பட்டாள்.

"குழந்தை! என்னம்மா வேண்டும்?" என்றார் டாக்டர்.

"கண்ணே! பால் சாப்பிடுகிறாயா?" என்றாள் தாயார். "அடி என் செல்வமே! என்ராஜா உனக்கு என்ன வேணும்" என்று பிரலாபித்தாள் பாட்டி.

"குழந்தை கேட்பதைக் கொடுங்கள்!" என்றார் கம்பீரமாகச் சங்கர தேவர்.

ஆனால் இவை எதையும் பொருட்படுத்தாது, கண்ணை மூடிக்கொண்டு "கனவு" உலகில் சஞ்சரித்தாள் மாலதி.

அரை மணி நேரம் நிசப்தம் நிலவிற்று. ஒருவாறு கண்களைத் திறந்து மீண்டும் சுற்றுமுற்றும் பார்த்தாள். ஆனால் இம்முறை ஒருவரும் பேசவில்லை.

"ஐயோ! எங்கப்பா மிகவும் பொல்லாதவர். இங்கே நிற்காதே! ஓடிப்போ" — என்று உரக்கச் சத்தமிட்டாள். அவள் பார்வை அருகிலிருந்த ஜன்னலின் பக்கம் பாய்ந்தது. அனைவரும் அத்திசையை நோக்கினர். ஒன்றும் தோன்றவில்லை. அதே நிமிஷம் "ஹா" என்ற சப்தத்துடன், கட்டிலை விட்டுப் புரண்டு கீழே விழுந்தாள் மாலதி.

எல்லோருக்கும் பயம் அதிகரித்தது. மாலதியைத் தூக்கி மீண்டும் கட்டிலில் கிடத்தினர். எங்கேயோ எதையோ கண்டு பயந்து கொண்டதாகவே முடிவு கட்டி விட்டனர். உடனே சிறந்த மந்திரவாதி ஒருவன் வீட்டிற்கு ஓடினான் வேலையாள்.

அந்தோ! களங்கமற்ற நெஞ்சத்தின் தன்மையறியாது பேய் என்றும், பிசாசு என்றும் பரிதவிக்கின்றனர் பெற்றோர். பால்மணமாறாத சிறுமியின் உயிர் அன்பின் முதிர்ச்சியால் பூத உடலை விட்டுச் சென்றது. "ஐயோ சிறுவன் கதி எப்படியோ?" என்ற கிளர்ச்சி ஆவேசத்தை மூட்டியது. ஆயினும் அன்பின் சக்தி அதை மாலை ஏழரை மணிவரை நிறுத்தி வந்தது. தன் அன்புத் தோழனை, மீண்டும் ஒரு முறை காண்போமா என்ற ஏக்கம் அவளை நிலைகுலையச் செய்தது. எவ்வளவு அன்பைக் காட்டினும், தன மனக்கிளர்ச்சியை எடுத்துக்கூற முடியாதபடி அடக்கிவைக்கும் பெற்றோர்களின் தன்மை சாரமற்றது.

எதற்காக உயிருடன் போராடிக்கொண்டிருந்தாளோ, அவ்வுருவத்தை—தனக்காக உண்மையில் உள்ளம் உருகிக் கண்ணீர் விட்டுக் கதறியழும் அப் "பறச் சிறுவனை"— சமூகம் வெறுக்கும் அச்சிறுவனை உயிரிழக்கும் தறுவாயில் தான் காப்பாற்றிய அச்சிறுவனைத் தோட்டப்புறத்து ஜன்னல் வழியே பார்த்தாள். இனி அவளுக்கு என்ன வேலை?

'பறச்சிறுவன்' அந்நள்ளிரவில் மறைந்தவன்மறைந்தவன் தான்! மீண்டும் அவனைப் பற்றி யார் கவலைப்படுவார்கள்? ○

மார்ட்டின் லூதர்

கே. ஏ. மதியழகன்

மார்ட்டின் லூதர்! இந்தப் பெயரைக் கேட்கவே மாதா கோவில்கள் மருண்டன. பாதிரிமார்கள் பதைபதைத்தனர். நடுங்கிய அவர்கள் நாவிலிருந்து நாசக்காரன், நாஸ்திகன் என்ற நஞ்சுச் சொற்களை உமிழ்ந்தனர். ஒழியமாட்டானா ஊரைக்கெடுக்கும் இந்த உளறுவாயன் என்று உறுமினர், சமூகப் பிரஷ்டம் என்றனர். அவன் சாயவில்லை. சாம்பலிடுவோம் உனது ஏடுகளை என்றனர். அவன்சலிக்கவில்லை. சாவு நாங்கள் அளிக்கப் போகும் சன்மானம் என்றனர். அவன் சஞ்சலப்படவில்லை. சளையாது தனது சண்டமாருத பிரசாரத்தைத் தொடங்கினான். அவனது ஆணித்தரமான, பொருட்செறிவுள்ள, அறிவு விளக்கத்தின் முன்பு ஆண்டவனின் பிரதிநிதிகள் என்று ஆர்ப்பரித்த அந்த நாட்டு "அர்ச்சகர்கள்" அலறினர். கத்தோலிக்க குருமார்கள் கதிகலங்கினர். ரோமாபுரி குருமூர்த்தி, போப்பாண்டவர் புயலெனக் கிளம்பினார், இந்தப் புதுஉலகதூத, புரட்சிவீரனை—அல்ல, அவர்கருத்திலே, புல்லனை, பொல்லாங்குக்காரனை, மதவிரோதியை, மகேஸ்வரனுக்கு மாசுகற்பிக்க வந்த மாபாவியைப் பொசுக்க! அவர் பக்கத்திலே உறுதுணையாக நின்றவன் மன்னர் மன்னன் ஐந்தாம் சார்லஸ். சாம்ராஜ்யத்துக்கு அதிபதி. சாமானியனல்ல. ஸ்பெயின் நாட்டு மகுடபதி. இத்தாலியமண்டலம் முழுதும் அவன் குடைக்கீழ் இருந்தது. அலைகடலுக்கு அப்புறமுள்ள அமெரிக்கப் பிராந்தியங்களில் அவன் அரசின் ஆணை! அப்பேற்பட்ட பேரரசன் சார்லஸே ஆண்டவனுக்கு எதிராக நடந்த அக்ரமக்காரன், வேதநிந்தகன், விதண்டாவாதி. மார்ட்டின்லூதரை வேரறுக்க, கச்சையைவரிந்து கட்டிக்கொண்டு கனல்கக்கும் கண்களுடன் ஆயத்தமானான். அவனது அடக்குமுறை பாணங்களைக் கூர்மையாக்கினான். அவனது விசித்திரநடவடிக்கைகள் அபாய அறிவிப்புகளாயின!

அந்த மாவீரனா இந்தச் சலசலப்புக்கு அஞ்சுபவன். ஐரோப்பிய நாடுகள் அத்தனையும் போப்பாண்டவர் ஆட்டும் சுட்டுவிரல் கண்டு ஆடின. அப்படிப்பட்ட அவரின் மதப்பிரஷ்ட உத்தரவுத்தாளை மத்தியானத்திலே பலமக்கள்முன்னிலையில் ஏளனமாக நெருப்பிலிட்டு எரித்தான் அவனைச்சித்திரவதைச்செய்ய, சிறைபிடிக்க செய்யப்பட்ட முயற்சி ஏராளம். அவன் மீது சுமத்தப்பட்டபழி, தூஷணை, வசைமாரி கொஞ்சநஞ்சமல்ல. ஆனால் அவனோ இவைகளைக்கண்டு குறுநகை புரிந்தான். தனது பணியைத் தொடர்ந்து செய்தான். தனது

வேலை நிச்சயமாக வெற்றி பெறும் என்ற நம்பிக்கை அவனுக்கு. தான் கூறுவதிலே நியாயம் இருக்கிறது, நேர்மை இருக்கிறது. உண்மை இருக்கிறது, ஊராருக்குத் தேவையான நன்மை இருக்கிறது. என்றேனும் ஒருநாள் குவலயம் தனது கொள்கையை ஏற்கும் என்ற குலையாத நம்பிக்கையும் குன்றாத உறுதியும் அவனுக்கு இருந்தது.

மக்கள் மனதிலே கொஞ்சம் கொஞ்சமாக மார்ட்டின்லூதரின் கருத்துக்கள் தவழ ஆரம்பித்தன. காரணம் குருமார்களின் கோலாகலங்கள் அவர்கள் கண்முன்தெரிய ஆரம்பித்தன. ஆண்டவனுக்கும் ஆத்மாவுக்கும் தொடர்பேற்படுத்த வேண்டிய அவர்கள் அரண்மனை வாழ்விலும் அலங்கார வைபவங்களிலும் ஆழ்ந்தனர். 'பரலோகத்துக்கு வழிகாட்டி' என்று தாங்கள் பெற்றபட்டம் பதவிகளின் போர்வையிலே பட்டத்தரசரும் பொறாமைப் படும் பரிமள வாழ்விலே புரண்டனர். அந்த மமதையாளர்களின் மந்தகாசவாழ்வு, வெளிக்கு வேதாந்தியாய் நடித்து வேறு இடத்திலே அவர்கள் செய்த லீலா விநோதங்கள் சன்மார்க்கத்திற்காக அமைக்கப்பட்டிருந்த சௌகரியங்களை, சொந்த லௌகிக சுகபோகங்களுக்காக விபசாரம்செய்த விசித்திரம், மடாலயங்களுக்கு இருந்த மலைபோன்ற செல்வம், ஏராளமான நிலபுலன்கள், கர்த்தரின் பெயரிலே மேலும் மேலும் காணிக்கையாகப் பெற்ற காசு, வரியின்பெயரால் மக்களைச் சுரண்டிய சூது, அரசியலிலே ஆதிக்கம் செலுத்த விரும்பிய அந்த ஆலய வாசிகளின் ஆணவம், மௌடீகத்தை, குருட்டு நம்பிக்கையை, கொள்முதலாக வைத்து அவர்கள் செய்த வஞ்சகவாணிபம், பித்தலாட்டப் புரட்டு—இவை அத்தனையும் காலமெல்லாம் கண்மூடிக் கிடந்த கத்தோலிக்க பக்தர்களின் கண்ணிலும் கருத்திலும் பட ஆரம்பித்தன. மறுமலர்ச்சி இயக்கமெனும் அருணோதய நேரம். எங்கணும் பகுத்தறிவு ஒளிக்கிரணங்கள் வீசிய தருணம். ஏன், எதற்கு, எப்படி என்ற வினாக்கள் விசாரணையறிவை எழுப்பியகாலம். எனவே வீணான சம்பிரதாயங்கள் பல சரிந்தன, வைதீக பழக்க வழக்கங்கள் பல தவிடு பொடியாயின, மறுமலர்ச்சி இயக்கம் மலர இருந்த மதப் புரட்சிக்கு விதை தூவியது.

இந்த நேரத்தில்தான் டெட்சல் என்ற பாதிரி பாவமன்னிப்புப் பத்திரங்களை விற்பதற்கு ஜெர்மனியிலே தோன்றினான். பாவமன்னிப்புப் பத்திரங்கள் என்பவை மனிதர்செய்தபாவத்தைத் தொலைக்க மடாலயங்களுக்குப் பணத்தைப் பரிசாக அளித்துப் பாதிரிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட சீட்டுக்கள்! இதன் பொருள் இலஞ்சம் கொடுப்பதன் மூலம் ஆண்டவன் சந்நிதியிலே தான் செய்த குற்றத்தை ஏமாற்றி விடலாம் என்பது. இந்தவெட்ககரமான ஏற்பாட்டால், செல்வக்குவியல் ஒன்றையே லட்சியமாகக் கருதிய போப்பாண்டவர்கள் பலமுறை குற்றஞ் செய்த படுமோசக்காரர்களுக்கும், அக்ரமத்தின் சொரூபங்களுக்கும், அநியாயத்தின் எல்லையை எட்

டிப் பிடித்தவர்களுக்கும், பாவ மன்னிப்புப் பத்திரங்கள் விற்பதை வியாபார முறையாகக் கொண்டனர். இந்தக் கேவலமான நடவடிக்கை மார்ட்டின் லூதருக்குக் கோபாவேசத்தை உண்டுபண்ணியது. டெட்சல் என்ற பாதிரி பாவமன்னிப்புப் பத்திரத்துடன் ஜெர்மானிய மண்ணிலே தோன்றியதும், அந்தநாள் அறிஞர் வழக்கப்படி 95 மறுப்புக்கள் அடங்கிய ஆராய்ச்சி ஏட்டை விட்டன்பர்க் தேவாலய வாயிற்கதவில் ஆணியில் அடித்துத் தொங்கவிட்டான். அவனது காரணங்களை யார் வேண்டுமானாலும், எந்த மதிவாணர் வேண்டுமானாலும் மறுக்கட்டும் என்று சவால் விட்டான்; அறைகூவியழைத்தான்.

ஆரம்பத்திலே பாவமன்னிப்புப் பத்திரங்களை எதிர்ப்பதே லூதரின் கொள்கையாய் இருந்தது. ஆனால் அவனது மறுப்புக்குப் பின் மலையெனக் கிளம்பிய எதிர்ப்பும், ஏளனமும், பாவமன்னிப்புப் பத்திரம் மாத்திரமல்ல, பாதிரிமார்களின் பழமையும், போப்பாண்டவரின் சர்வாதிகாரமும், கத்தோலிக்க மதத்தின் கண்மூடித் தத்துவங்களும் எனது கண்டனத்துக்கு உரியவை எனக் கர்ஜிக்கச் செய்தன. போப்பின் தலைமைப் பீடத்தைத் தரைமட்டமாக்க வேண்டுமென்பது அவனது தணியாவேட்கை. தருக்கு நிறைந்த அவர்களின் தகுதியின்மையைத்தரணிக்குத் தம்பட்டம் அடித்தான். மருண்ட மதத்தலைவர் போப்பாண்டவர்தான் மதப்பிரஷ்ட உத்தரவைநீட்டினர். அதைத்தான் நெருப்புக்கு விருந்தாக்கினுன் வீரம்நிறைந்த வித்தகன்!

மன்னர் மன்னன் சார்லஸ் மார்ட்டின்லூதரின் முயற்சியைக் கண்டு மருண்டான். மதச்சபைகள் பலவற்றைக் கூட்டினுன். இவனது ஏடுகளை எரியுங்கள் என எக்காளமிட்டான். இவனைக் கொல்ல வேண்டுமென்று கொடுந் தீர்மானமும் செய்தான். ஆனால் லூதரோ சாக்ஸனி இளவரசனிடம் அடைக்கலம்புகுந்தான். மார்ட்டின்லூதர் மறைந்து வாழ்ந்தானே தவிர அவனது கொள்கைகள், நாடு, நகரமெங்கும் பட்டி, தொட்டிகளிலெல்லாம் பரவத் தொடங்கின. மன்னர் மாளிகைகளிலே, மண் குடிசைகளிலே, ஏழைப் பாமர மக்களிடையே, போர்வீரர்களிடையே, மாணவர்களிடையே— எல்லோரிடையேயும் இவனைப் பற்றியே பேச்சு. இவனது கொள்கைகளைப்பற்றி வாதப் பிரதிவாதங்கள் சாலைகளிலே, சோலைகளிலே, வயற்புறத்திலே, வாய்க்கால் ஓரத்திலே, பல்கலைக்கழகங்களிலே, கடைத் தெருக்களிலே, கண்ட கண்ட இடங்களிலெல்லாம் லூதரின் இருதயகீதம் எதிரொலித்தது. மார்ட்டினைப் பின்பற்ற ஆயிரக் கணக்கில் அணி அணியாய் மக்கள் திரண்டனர். பழமைக்குச் சவக்குழிவெட்ட, புத்துலகம் சமைக்க, பலர் கிளம்பினர். 'மார்ட்டின் லூதரின் கோட்பாடு வாழ்க' என்ற ஒலி எங்கும் பரவியது.

இவனுக்கு முன்பு சில பலர் இதே காரணங்களுக்காகப் போராடியுள்ளனர். வாழ்நாள் அத்தனையும் அர்ப்பணித்துள்ளனர். கொடுமை பலவற்றை அநுபவித்துள்ளனர். அவர்களுக்கு ஏற்படாத செல்வாக்கு

லூதருக்கு ஏற்பட்டது. இங்கிலாந்து நாட்டிலே விக்ளிப் எனும்விவேகி கிளம்பிக்கத்தோலிக்க மதத்தின் பல தவறுகளை, மதத்தரகரின் பல புரட்டுகளை மக்கள் மன்றத்தின் முன் முழக்கினான். எனவே இவனை ஐரோப்பிய வரலாற்றிலே "மதச் சீர்திருத்தத்தின் விடிவெள்ளி" என அழைப்பதுண்டு. இவனைப் பின்பற்றி இவனது போதனைகளை ஜான் ஹஸ் என்ற அறிஞன் பொஹிமியா மண்டலத்திற்கு எடுத்துச் சென்றான். ப்ரேக் பல்கலைக் கழகத்திலே விக்ளிப்பின் அறிவுரைகளை அடிப்படையாகக் கொண்டு பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினான். அவனது பேச்சு, படித்த பல்கலைக்கழக மக்களிடையே மட்டுமன்றிப் பாமரர் உள்ளங்களிலும் சென்று படர ஆரம்பித்தது. இதைக்கண்டு பாதிரிமார்கள் பதைபதைத்தனர். பழிவாங்க வேண்டுமென்ற நச்சு எண்ணம் அவர்கள் உள்ளத்திலே நர்த்தனம் புரிந்தது. சூழ்ச்சித் திட்டம் ஒன்று உருவாகியது. மத வித்தியாசங்களுக்கு முடிவுகட்ட மதச் சபை ஒன்றைக் கூட்டினர், தனது கொள்கைகளை வலியுறுத்த ஜான் ஹஸ்ஸையும் அழைத்தனர். இவர்களின் தீய நோக்கத்தைத் தெரிந்தோ என்னவோ, வர இயலாதென மறுத்தான். ஆனால் உயிருக்கு உத்தரவாதம் என உறுதி கூறி வரச் செய்தனர். கள்ளங் கபடமற்ற அந்த அறிஞனும் கன்னெஞ்சர்களின் அவையிலே புகுந்தான். ஆனால் அங்கு நடந்ததென்ன? ஜான் ஹஸ் மத விரோதி என்று குற்றஞ் சாட்டப்பட்டு வழக்கு மன்றத்திலே குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டான். இறுதியில் அந்த உத்தமனின் உயிரும் உடலமும் தீக் குண்டத்தின் கோரப்பசிக்கு உணவாகப் பரிமாறப்பட்டன. இதே கதி பிளாரெண்டைன் சீர்திருத்தக்காரன் சவனரோலா என்பவனுக்கு நேரிட்டது. இத்தகைய பரிதாபகரமான சோகச் சம்பவங்களுக்குக் காரணம் மக்கள் அறியாமைத் தளைகளால்கட்டுண்டிருந்ததே, அவர்கள் சுயமாகச் சிந்தனை செய்யும் பண்பை — பகுத்தறிவின் மாண்பை உணராமலிருந்ததே.

ஆனால் மார்ட்டின் லூதரின் நாட்களிலே மக்கள் அறிவு விளக்கம் பெற்றிருந்தனர். அச்சுப்பொறி கொள்கையைப் பிரசாரம் செய்யும் அற்புத சாதனமாய் அமைந்தது. மக்களும் ஆட்டு மந்தைகளாய் இல்லை. ஆராய்ச்சி அறிவின் முன் தலை வணங்கினர். பல இளவரசர்களே மார்ட்டின் லூதரைப் பாராட்ட முன் வந்தனர். மேலும் சார்லஸ் மன்னனோ அடிக்கடி போர்க் கோலம் பூண்டிருந்தான். அரசியல் அமளிகளை அடக்க வேண்டியிருந்த அவனுக்கு அறிவுப் பிரச்சாரம் பரவுவதை அறிய முடியவில்லை. அறிந்தாலும் அழிக்க நேரமில்லை. எனவே மதப் புரட்சி காட்டுத்தீயெனப் பரவியது. பலமடாலயங்கள் பூண்டோடு பூண்டாய் மறைந்தன. பல பாதிரிமார்கள் ரோமாபுரிக்கும் தங்களுக்கும் உள்ள தொடர்பைக் கத்தரித்துக் கொண்டனர். ஆடம்பர முறையெலாம் அகற்றப்பட்டு எளிய வழிபாட்டு முறை தேவா

லயங்களிலே கையாளப்பட்டது. லத்தின் மொழி கல்லறைக்கு அனுப்பப்பட்டுத் தாய்த் திருநாட்டு மொழியாகிய ஜெர்மானிய மொழியிலேயே மத காரியங்கள் நடைபெற்றன.

நாட்டிலே ஏற்பட்ட விழிப்புணர்ச்சியையும், எழுச்சியையும் தீவிரவாதிகளெனச் சொல்லிக்கொண்ட சிலர் தாறுமாறான செயலுக்குத் திருப்பினர். விக்ரகங்களை உடைப்பது, மடாலயங்களுக்கு தீவைப்பது போன்ற பலாத்கார முறைகளைத் தூண்டினர். போர் வீரர்கள் பலர் ஜெர்மன் இளவரசர்களுக்கு எதிராய்த் திரண்டனர். இவர்கள் புரிந்த அக்ரமம் ஏராளம். தனதுலட்சிய வெற்றிக்கு, மார்க்கம் பரவுவதற்கு இவை பாதகமாய், தடைக்கற்களாய், முட்டுக் கட்டைகளாய் அமையும் எனக் கலங்கினான். சிலரிடையே செல்வாக்குச் சிதையும் என்பதை உணர்ந்தும் இவற்றை வன்மையாக கண்டனம் செய்தான். காரணம் அன்பு முறையில் தான் தனது வெற்றியின் இரகசியம் இருக்கிறதென மனமார நம்பினான்.

மார்ட்டின் லூதரின் வெற்றிக்குக் காரணம் அவனிடம் அமைந்திருந்த அரிய பண்புகளே. பாவமென்பது இவன் அறியாத பொருள். இவனது தோற்றம் கம்பீரமானது. சொல்வன்மையே பலரை உணர்ச்சியின் உருவங்களாக்கியது. மலைகுலையினும் குலையும், இவனது மனம் குலைந்ததில்லை. அவ்வளவு குலையாத

உறுதியும் குன்றாத ஊக்கமும் விருப்பு வெறுப்பைப் பற்றிக் கவலை கொள்ளாத பிடிவாத மனோபாவமும் இவனது இரத்தத்திலே கலந்திருந்த குணங்கள். எனவேதான் குவலயமே கும்பிட்டு வாழ்ந்த போப் பாண்டவருக்குஎதிராக வாளெடுத்தான். சிலபல நேரங்களில் வன்மையாகவும் வசை மொழி கலந்தும் பேசிவிடுவான். ஆனால் அவைகளின் அடித்தளத்திலே அவனது நேர்மைத் தன்மையும் நெஞ்சுறுதியும் ஒளி விட்டன. இவனது தாய்தந்தையரும் மூதாதையரும் குடியானவகுப்பைச் சேர்ந்தவர்கள். அந்த வகுப்புக்குரிய எளிமையை வாழ்நாள் முழுதும் பின்பற்றினான். ஆடம்பரம் அலங்காரம் இவைகளின் கொடிய பகைவன். தெளிந்த அறிவும், பரந்த அனுபவமும் உடையவன். சிறு பிராயத்திலே, வழக்கறிஞனாக வேண்டும் என்று விரும்பிய மாதா பிதாக்களின் ஆசையிலேயே மண்ணைப் போட்டுவிட்டு மடாலயமொன்றிலேசேர்ந்து அதன் சகல முறைகளையும் நேரில் உணர்ந்தவன். அங்கே நிறைந்திருந்த ஆபாசங்கள் வெறுப்பளிக்கவே விட்டன்பர்க் பல்கலைக் கழகத்திலே பல நாட்கள் மதபோதகாசிரியனாய் அமர்ந்திருந்தான். பின்பு ரோமாபுரிக்குச் சென்று வந்தான். அவன் அங்கு கண்டதும் கேட்டதும் தான் அவனை மத எதிர்ப்பு வீரனாக்கின.

எதிர்ப்புக் கஞ்சாமல், ஏளனத்துக்குச் சலியாமல் தொடர்ந்து பணியாற்றினான். லத்தின் மொழிக்கு எதிராக ஜெர்மன் மொழியின் மேம்பாட்டை நிறுவியவன் இவனே. முதன் முதலிலே பைபிளை ஜெர்மன் மொழியிலே மொழி பெயர்த்தான். ஜெர்மன் இலக்கிய வானிலே மங்காத தாரகையாய் இன்னும் ஒளிவிடும் உன்னத ஏடு இதுவாகும்.

மேலும் அந்நியர் ஆதிக்கத்தினின்றும் விடுபட நடத்தும் போராட்டம் அவனது அறப் போர் என முழங்கினான். "ஜர்மானிய நாடு ஜர்மானியருக்கே" என்பது அவனது தாரக மந்திரம். இந்த விடுதலை விருத்தத்தில் உரிமை ஒலியில் ஓர் கவர்ச்சி யிருந்தது. காரணம் ஜர்மானியரின் வாழ்வு அந்நியரின் காலடியிலே சிக்கி நசுங்கி யிருந்தது. அரசியல் துறையில் ஆதிக்கம் செலுத்தியவன் — சார்லஸ் மன்னன் — ஸ்பெயின் நாட்டான். மதத் துறையில் ஆதிக்கஞ் செலுத்தியவர் — போப்பாண்டவர் — இத்தாலிய நாட்டான். எனவே "ஜர்மானிய நாடு ஜர்மானியருக்கே" என்ற முழக்கம் நல்ல அறுவடையைத் தந்தது. மார்ட்டின் லூதரின் கொள்கையும் கோட்பாடும் ஜர்மனியைத் தாண்டி டென்மார்க், ஸ்வீடன், இங்கிலாந்து, ஸ்விட்சர்லாந்து, ஸ்காட்லாந்து ஆகிய இடங்களிலெல்லாம் பரவின. ஸ்விட்சர்லாந்திலே கொள்கையைப் பரப்ப நடந்த போரில் கொலையுண்ட ஸ்விங்ளியும், கொண்டிருந்த கோட்பாட்டிற்காகப் பிரஞ்சு நாட்டைப் பிரிந்து ஜினீவாவில் வாழ்ந்த சீர்திருத்தச் சிங்கம் கால்வினும், ஸ்காட்லாந்திலே பிரஞ்சு ஆதிக்கத்துடன் சமர் செய்த ஜான் நாச்சும் மற்றையோரும் மார்ட்டின் லூதரின் பரம்பரையினர் தாம். ○

அந்தத் தாலி!

தமிழரசன்

விதவை என்னும் இரும்புச் சங்கிலி! கட்டுப்பாடு என்னும் இருட்டறைதான், அவள் உலகமும் பூஞ்சோலை. இன்று இருட்டறையை விட்டு வெளியேவரத் துடித்தாள்! ஆனால் ஏதோ சொல்லமுடியாத ஒருஉணர்ச்சி — அடிமைத்தனம்— அவளைக் கீழே அழுத்தியது.

"வேண்டாமடி இந்த விபரீதம். இந்தத்தாலியைப் பார், இதைக்கட்டிய கணவனுக்கு நீதரும பரிசு இதுதானா?"

மனத்தில் இன்னும் சாகாமல் உலவிக் கொண்டிருந்த அந்த அடிமை உணர்ச்சியின் கூக்குரல் இது.

இதைக்கேட்ட, கையிலிருந்த தாலி சிரித்தது.

"என்னை உன்கழுத்தில் கட்டினானே உன்கணவன், அவன் உனக்குத் தந்த பரிசு என்ன என்று திருப்பிக் கேளடி" என்று அது பேசிற்று.

விதவை! ஆம்! விதவை என்ற பட்டம்தான் அவன் தந்த பரிசு! விதி என்ற மயக்க மருந்திட்டு, சாஸ்திரம், சம்பிரதாயம், சடங்கு என்ற தீக்குழம்பிலே, பழுக்கக் காய்ச்சிய வைதிகம் என்ற இரும்புக் கம்பியினால் பொறிக்கப்பட்டஎழுத்துக்கள்!

மீண்டும் அந்தத்தாலி பேசுவதுபோல் இருந்தது.

தனியாக இருக்கும்போது எத்தனையோ தடவைகள் அதை எடுத்துப் பார்த்திருக்கிறாள்! கண்ணீர் வடித்திருக்கிறாள். ஒவ்வொரு தடவையும் அது இறந்துபோன அவள் கணவனை ஞாபகப் படுத்தும். நீண்ட பெருமூச்சு ஒன்றால் அந்த நினைவை அழித்து விட்டு, மறுபடியும் பெட்டிக்குள் வைத்து மூடிவிடுவாள்.

ஒவ்வொரு தடவையும் அந்தத் தாலி அவள் உள்ளத்தில் ஒரேமாதிரியான உணர்ச்சியைத்தான் கொடுத்தது. அந்த உணர்ச்சி அவள் கண்களின் வழியாகக் கண்ணீராய் வெளிவரும். அந்தக் கண்ணீர் —ஒரு சோகத் தொடர்கதை— அதற்கு முடிவே கிடையாது.

ஆனால் இன்று.........

தாலி அவள்கையில் இருந்தது. அவள் உள்ளத்தில் பல்வேறு உருவமற்ற உணர்ச்சிகள் ஓடிக்கொண்டிருந்தன. கண்கள் கோவைப் பழம்போல் சிவந்திருந்தன. ஆனால் கண்ணீர் வரவில்லை. கடலிலே அலைகள் தோன்றுவதும் மறைவதும் போல அவள் மனக்கடலிலே, எண்ணங்கள் தோன்றுவதும் மறைவதுமாயிருந்தன.

அந்தத் தாலி அவள் கழுத்திலே கிடந்தபோது எவ்வளவோ உரிமையோடு வெளியே போயிருக்கிறாள். சினிமாவுக்குப் போயிருக்கிறாள். சிரித்துச் சிரித்துப் பேசியிருக்கிறாள். ஆனால், இன்று, வீட்டு வாசற்படிக்குக்கூட வரமுடியாது. மெல்லிய தாலிக்கயிறு தொங்கிக் கொண்டிருந்த கழுத்திலே,

"பைத்தியக்காரி! கழற்றி எறிந்த தாலியை மீண்டும் கழுத்திலே கட்டக்கூடாது என்று எந்தச்சட்டம் கூறுகிறது? இந்த நாட்டில்தான் எந்த நாட்டிலுமில்லாத குருட்டுக் கொள்கை முளைத்திருக்கிறது! உன் விலங்குகளை அறுத்தெறியும் வீரன் வெளியே காத்துக் கொண்டிருக்கிறன். புறப்படு விரைவில்"

அவள் தயங்கினுள். கையிலிருந்த தாலியைத் தொட்டுப் பார்த்தாள். அதைக் கட்டியவன் ஆறுமாதத்திற்கு முன் தான் இறந்தான். ஆனுல் அவள் அழகும் இளமையும் இன்னும் சாகவில்லை. அதற்கு அவள் பொறுப்பா?

இத்தனை நாளும் கட்டுப்பாடு, சட்டதிட்டம் என்ற சிறைக்குள்ளே அடைக்கப்பட்டிருந்தாள். நேற்று அந்தச் சிறைக் கம்பிகளில் ஒன்று பிடுங்கி எறியப்பட்டது. ஒரு விநாடி கண்களைமூடிக்கொண்டு அந்தச் சம்பவத்தைத் தன் நெஞ்சுக்குள் கொண்டுவந்து நிறுத்தினுள்.

ஃ ஃ ஃ

பக்கத்துவீட்டு வாலிபன்— சிர்திருத்தவாதி — தோட்டத்துக் கிணற்றில் தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கும் போதுதான் தற்செயலாக அவனைப் பார்த்தாள். அவனே, இவளை விழுங்கிவிட்டுத்தான் வேறு வேலை பார்ப்பது என்ற நிலைமையில் நின்று கொண்டிருந்தான். அவள் தலையைத் தொங்கவிட்டபோதும், கண்கள் மட்டும் அடிக்கடி அவ் வாலிபனைப் போய்த்தாக்கியது.

தண்ணீரை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றுள். அப்பா இன்னும் வரவில்லை. அம்மாவோ, வீட்டு வாசலில் காவல் நின்று கொண்டிருந்தாள். மீண்டும் தோட்டத்திற்கு வந்தாள். இன்னும் அவன் போகவில்லை.

குப்பைகளைப் பொறுக்குவதுபோல வேலியின் அருகில் சென்றுள். அவனும் பக்கத்தில் வந்தான்.

"இதோ. எங்கள் தோட்டத்தில் பூத்த ரோஜா" என்று கையிலுள்ள மலர்களை அவளிடம் கொடுத்தான். அதை வாங்கும்போது அவள் கைகள் நடுங்கின, உடம்பு வியர்த்தது.

"ஐயோ, உங்கள் கையில் இரத்தம் வருகிறதே" என்றுள் பதற்றத்துடன். அவன் விரலில் சிறிது இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

"முள்குத்திவிட்டது. ஆனுல் முள் குத்துகிறதே என்று பார்த்தால் ரோஜா கிடைக்குமா?" என்றுன்.

"ஆமாம்" என்றுள் எதையோ நினைத்துக்கொண்டு

"நீயும் ஒரு ரோஜா" என்றுன்.

"ஆனுல் உங்கள் வீட்டுத் தோடடத்தில் பூக்கவில்லையே" என்றுள்.

"தைரியம். நீ வேலிக்குள் அடைக்கப்பட்டிருக்கிருய். வேலியை விட்டு வெளியே வரத் தைரியமிருந்தால் சொல். வேலியையே அழித்துவிடுகிறேன்" என்றுன். இதற்குள் ஏதோ காலடிச் சத்தம் கேட்கவே இருவரும்பிரிந்தனர்.

ஃ ஃ ஃ

"என்ன உனக்குத் தைரியமிருக்கிறதா?" என்று யாரோ கேட்பதுபோல் இருந்தது. கையிலிருந்த அந்தத் தாலி நழுவிக்கீழேவிழுந்தது. அதைத் தொடர்ந்து இரண்டு கண்ணீர்த்துளிகளும் விழுந்தன.

வளரும் இலக்கியம்

கதம்பம்

இத்தொகுப்பில் பலவகைக் கதைகள் இருக்கின்றன. எனவே இப்புத்தகத்திற்கு இப்பெயர் பொருத்தமானது தான். 'தழுவும துருவங்கள்'— என்ற தலைப்பில் உள்ள கட்டுரை கதை போலவேயில்லை. கற்பனை ஓடாத நேரத்திலே கதைஎழுத உட்கார்ந்த ஆசிரியரின் பேனு, படைத்த படைப்பென்று இக்கட்டுரையைக் கருதலாம். 'சீதையை மணந்த இராவணன்'—என்ற கதை வெறும் வேடிக்கைதான். ஏதேனும ஒரு நோக்கத்தையோ, குறிக்கோளேயோ கூறுவதாக இல்லை. 'செல்லாயி'—ஒரு காமக்கதை, எனினும் உருக்கமானது. 'வெள்ளிப்பணம்'—நல்லகற்பனை, படித்து முடித்த பின்னும் உள்ளத்தில் மின்னிக் கொண்டிருக்கும் தன்மையுடையது. 'கருங்குழி பார்சல்'—மற்ருெரு காமக்கதை—என்ருலும் நாட்டில் அன்ருடம் நடப்பது—புரையோடிப் போனபுண்—அறுவை செய்து தீர்க்க வேண்டியதே. இக்கதைகளைத் தீட்டியவர் தில்லை வில்லாளன். வெளியிட்டோர்; எரிமலைப் பதிப்பகம், துறையூர், திருச்சி. விலை 8 அணு.

அஞ்சலை

ஒரு பணக்காரப் பையன் அஞ்சலையைத் தன் காமவெறிக்குப் பலியிட்டான். பின்னர் அவளைக் கைவிட்டான். இந்த நிலை நாட்டில் இருந்து வருகிறது. இதை யொழிக்க ஆட்கள் தேவை. எப்படிப் பட்டவர்கள் என்று கேட்டால் காத்தானைப் போன்ற முரடர்கள் (வீரர்கள்) தேவை. காத்தானை ஊர் போக்கிரி என்று பழித்தது. ஆனல் அந்த வீரன் ஊர் வியக்கும் முறையில் அந்தப் பணக்காரப் பையனுக்கும் அஞ்சலைக்கும் திருமணம் செய்து முடித்துவிடுகிருன். அவன் திருமணம செய்து வைக்கும் முறை புதுமையானது மட்டுமல்ல, விந்தையானதுங்கூட. தில்லை வில்லாளன் தீட்டியது. தென்துருவம்; 29,நாட்டுப்பிள்ளைத்தெரு,சிதம்பரம். விலை 4 அணு.

கழுதை ஊர்வலம்

இக்கதை பொன்னியில் வெளிவந்தது. இன்றுபுத்தகமாக வடிவெடுத்துள்ளது. அரசியற் சூழ்ச்சிகள் எப்படித்தான் நடைபெற வேண்டுமென்ற கட்டில்லை; அவை புதுப்புது வழிகளில் புதப்புது உருவங்களில் படையெடுப்பன. அவற்றிலே ஒருமுறைதான் 'கழுதை ஊர்வலம். எட்டுக் கூட்டத்தவர் கட்டுப்பாடாக இருந்தார்கள், எதிரிகள் வாலாட்டமுடியவில்லை. ஆனல் ஒரு' கழுதை ஊர்வலம்' அவர்கள் கட்டுப்பாட்டைக் குலைத்த வரலாறுதான் இக்கதை. 'கழுதை ஊர்

வலம்' வந்த ஒரு வாசகாரன் முடிவில் எட்டு மன்னர்களையும் கழுதை ஊர்வலம் வரச் செய்தான். அவன் விசித்திர மூளையில் தோன்றிய அதிசயச் சூழ்ச்சி வெற்றியடைகிறது. இதைத் திறம்படச் சித்திரித்துக் காட்டியுள்ளார் தில்லை வில்லாளன், விலை எட்டணா' எரிமலைப் பதிப்பகம், துறையூர் திருச்சி.

வள்ளுவர் கொள்கையும் வடவர் கொள்கையும்.

தமிழர்களே புவியின் முதல் இனத்தார் என்பதற்கு அறிஞர் காட்டிய ஆராய்ச்சிக் கருத்துக்களைச் சில பக்கங்களில் கூறிவிட்டு வடவர் புன் கொள்கைகளை எடுத்துக் காட்டியிருக்கிறார் ஆசிரியர். வடவர்கள் மூடக்கொள்கைகளைக் கடைப்பிடிக்கவேண்டி ஏற்பட்ட நிலைமைகளையும் எடுத்துக் காட்டியிருக்கிறார். 'இலெமூரியர்' என்பதை 'இல்மூரியர்,' 'மூரியர் இல்' என்றெல்லாம் ஆசிரியர் எடுத்துக் காட்டும் பொழுது நமக்குச் சிரிப்பை யுண்டாக்கும் அளவு, உண்மை யென்று தோற்றமளிக்க வில்லை, 'மூரியர்' என்ற சொல்லைத் தமிழென்று நாம் கருதவில்லை. 'குமரிக்கண்டம்' என்பதற்கு ஆசிரியர் கூறும் பொருள் பொருத்தமாக இருக்கிறது: 'தமியம், தமிழம்' என்ற சொற்களைப் பொருத்திக்கூறும் ஆசிரியரின் கூற்றை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தமிழர் கொள்கைக்கும் வடவர் கொள்கைக்கும் உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்ள, இந்நூல் ஓரளவு பயன்படும் எனக்கருதுகிறோம். ஆசிரியர் இறையனார், வெளியிட்டோர்; தமிழகம், உறையூர், விலை ரூ 1.

திருக்குறள் ஆராய்ச்சி!

ஒரு பொருளை விளக்கப்போகுமிடத்துச் சுற்றி வளைத்துக் கொண்டு வந்து சொல்லுவது அந்தக் காலத்தில் சிறந்த முறையாக இருந்திருக்கலாம். இப்பொழுது பொருளை உடனடியாக அறியத்தான் மக்கள் விரும்புகின்றனர். இப் புத்தகத்தில் ஆசிரியர், 'பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ-பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ?' என்ற அடிக்குப் பொருள்கூற முனைந்த ஆசிரியர் பாலுணவின் சிறப்பைக் கூறி முடிக்கவே எட்டுப் பக்கங்கள் கடந்துவிட்டன. நூலைப் பற்றிப் பதினெட்டாம் பக்கத்தில் தான் துவங்குகிறார். இம்



மானேஜர்:- (இந்திரன்) அம்மா, என்னகாரியமாய் வந்திருக்கிறீர்கள்?

பெண்மணி:- இங்கே ஒரு வேலை கிடைக்குமென்று வந்திருக்கிறேன்.

மானேஜர்:- உங்கள் பெயரென்ன?

பெண்:- அகல்யா

மானேஜர்:- அம்மா வேண்டாம்; வேறு இடம் பாருங்கள்.

முறை, எடுத்த நூலைப்படித்து விட்டுத்தான் வைக்கவேண்டும் என்ற எண்ணத்துக்குத்தடையாகிறது. ஆங்காங்கே தாம் கூறும் கொள்கையை அரண் செய்ய அறிஞர் பலரின் கருத்துக்களை எடுத்தாண்டிருக்கிறார் ஆசிரியர். திருக்குறளின் தெளிந்த கொள்கைகள் என்ற தலைப்பில் வள்ளுவர்கூறியுள்ள கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார். 'பரிமேலழகர்' உரையாராய்ச்சி' என்ற தலைப்பில் பரிமேலழகர் எவ்வாறு ஆரியக் கொள்கைகளை வலிந்து புகுத்துகிறார் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருகிறார். திருக்குறளின் உயர்வையறிந்து கொள்ளும் ஒரு வாய்ப்பை இந்நூலைப் படிப்பதன் மூலம் எய்தப் பெறலாம் என்று கருதுகிறோம். ஆசிரியர்: இறையனார். வெளியிட்டோர்: தமிழகம், உறையூர், திருச்சி. விலை ரூ 1—8—0.

மூதல் அறிக்கை

ஆரசியல் துறைகள் ஒவ்வொன்றிலும் திராவிடர்கள் பிற்போக்கடைந்துள்ள நிலையை அப்பட்டமாக விளக்கியும், அவர்களுக்கென்று ஒரு கட்சி அமைப்பில்லாத குறையையும் எடுத்துக்காட்டி உடனடியாகத் திராவிடர்கள் செய்யவேண்டிய கடமையையும் விளக்கி, அந்நாளில் திரு. பி. தியாகராசச் செட்டியார் வெளியிட்ட அறிக்கையைத் திராவிடமணிப் பதிப்பகத்தார் புத்தக வடிவில் வெளியிட்டிருக்கின்றனர். விலை 3 அணா. திராவிடமணிப்பதிப்பகம், தெப்பக்குளம், திருச்சி. —வேந்தரசன்

வரப் பெற்றோம்

பிச்சைக்காரி: ,,. கண்ணன் தீட்டிய க... திராவிடமணிப் பதிப்பகம், தெப்பக்குளம் திருச்சி, விலை 3 அணா.

படுகொலை: தி. பி. தமிழரசன் தீட்டிய கதைகள். பாலு புத்தக மன்றம், கீழப் புதுத் தெரு, திருநெல்வேலி.

கற்பா? காமமா?: திருப்பூர் ட. கந்தசாமி தீட்டியது, கிடைக்குமிடம் S. P. K. சாமி, சண்முக பவனம், துளசிராவ் வீதி, திருப்பூர், விலை 4 அணா.

கல்தாக் கோடுங்கள் பேரியாருக்கு: மகா மேதாவி எழுதியது. புரட்சிப் பதிப்பகம், கோயமுத்தூர். விலை 3 அணா.

விகடன்: வாரப் பத்திரிகை விலை இரண்டணா. ஆசிரியர் S. சோமசுந்தரம், 9 சின்னக்கடை தெரு, மதுரை.

வீரன்பாபு—சூரப்புலி: சிறுகதைப் புத்தகங்கள். ஒவ்வொன்றும் விலை அரையணா. சங்கு பதிப்பகம், ராயவரம், புதுக்கோட்டை.